அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

— Page. No. 209 —

ACC. No. 18586.

மலர்: 8 | இதழ் 5 | விலை அ 4

துன்முகி ஞு ஆவணிமீ

ஆகஸ்ட்-செப்டம்பர்-56

வருட சந்தா ரூ. 2-4-0



பாலூட்டிய பரன் இவனே எனும் ஞானசம்பந்தர்
பெரியபுராணச் சித்திர விளக்கம் 29; பக்கம் 235

பொருளடக்கம்

பக்கம்

1. ஏடேவு இராஜதம் (திருப்புகழ் மணி) ... 193
2. கோகுலாஷ்டமி (அ. கி. ரங்கராஜன்) ... 195
3. ஏழுமலையந்தணர் (முருகனடியார்) (ரசபதி) ... 198
4. சிந்தனைக் கொத்து (V.R.G.) ... 206
5. ஸமர்த்த குரு ராமதாஸ் (தி. ந. கோபால சர்மா) ... 211
6. என் தனி நெஞ்சம் யாருக்கு இருப்பிடம் (வா. ராமலிங்கம் பிள்ளை) ... 217
7. அருணகிரியும் ஆற்றுப் படையும் (தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை) ... 221
8. 'சுருதி முடி' திருப்புகழ் விரிவுரை (குகப்ரிய) ... 224
9. அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும் (திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,) 231
10. திருஞான சம்பந்தர் (கி. வா. ஜ.) ... 235
11. திருவண்ணாமலையில் திரு அருணகிரிநாதர் திருவிழா ... 238
12. A Three-World Wonder *(Thiruppugal Mani)* ... 239

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ" முதல் பங்குனி மீ" முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள் போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினல், சித்திரைமீ" முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தா தொகையை பெற்றுக்கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி, 54, பந்தர் தெரு, சென்னை.

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ஞு ஆவணி மீ ஆகஸ்ட்-செப்டம்பர்—1956	இதழ் 5

ஏடேவு இராஜதம்

(திருப்புகழ் மணி)

முருகனருளால் பெற்ற பெருமையை ஸ்ரீ அருணகிரிநாதர் வகுக்கின்றார். ஆதியும் அந்தமும், மேலும் ஜோதியாய் விளங்கும் பழைய ஞானத்தைப் பெற்றாராம். இது பரஞானம் எனலாம். ஆராயும் நூல்களின் கருத்தை அளிக்கப் பெற்றார். ஆகவே, அறுபத்து நான்கு கலைகளின் கருத்தை அளிக்கப் பெற்றார். பர, அபரஞானத்தை முழுவதும் உணர்ந்தார். ஆசாபாச காமக் குரோதாதி சமுத்திரத்தைக் கடக்கவும் பெற்றாராம்.

மனவாக்குச் செயலாலே பெறுதற்கரிய பெரும்பெயர் முருகனிடத்தில் தியானம் நிலைக்கவும் பெற்றார். பேறும் பெருவாழ்வும், உலகத்தில் மாந்தர் அடைவது முருகன் கருணையால்தான். முருகனைப்

பிறவிப் பெருங்கடலிற் பெயர்த்தென்னைக் காக்க
அறவா புறம்பயத்து அத்தா வருவாயோ

பாடி பெரும் புகழும், பிரசித்தியும் பெற்றாராம். இப் பெரும் பேறுகளையெல்லாம் பெற்றபின் செல்வாக்குப் பெற்றாராம். வாக்கு என்பது சொல்தானே. கேட்டவர்கள் செவியிலே கேட்டபின் கேட்டசொல் உணர்ச்சியிலே, நெஞ்சினிலே, நாவிலே, வாரா விட்டால் சொன்ன சொல் இறந்தே விட்டதுபோ லன்றோ? சொல்லெனும் தத்துவம் சொல்வது நாவிலே யன்றோ? அருணகிரியார் பெற்ற இந்தப் பெருமையை "ஏடு ஏவும் இராஜதத்தினைப் பணித்தார்" என்றார். அருணகிரியார் பாடிய பாடல்களெல்லாம், நாவை விட்டு நாவேறிச் செல்லும் சொற்கள். அரசன் உத்தரவிட்டால் அந்த ராஜரீக உத்தரவானது நாடெல்லாம் நாவினாலும் செவியினாலும் பரவுவது போல், வாக்கிற்கு அரசாகிய அருணகிரியின் திருப்புகழ்ப் பாக்கள் தெய்வீக அரசாங்கம் முழுவதும் பரந்தே செல்லும்படியாக முருகன் அருள் புரிந்தார். அரசாங்கத் திட்டத்தின் பயத்தினாலன்று, கிடைக்கும் பொருளினாலன்று, நேர்ந்திடும் பதவியினாலன்று, சப்தமிகுத்த சித்திர கவித்துவ திருப்புகழ்கள், மானிட அன்பைக் கவர்ந்து ஊரெல்லாம் பரவி வருகின்றன. இப்படி, இராஜத ஏடுகளாம் திருப்புகழை உலகினில் விடுத்திடவும் செப்பிடவும் பேரனுக்ரஹம் பெற்றார். எல்லாவித இராஜ்யங்களிலும் திருப்புகழ் இராஜ்யம் விநோதம். எண் திசையிலும் மானிட மேன்மக்கள் கேட்டும் பாடியும் நித்தியப் பொருளாய்ப் பரவும்படி பாடப் பெற்ற முருகன் கருணை பெரிது, பெரிது. இதற்கு

கண்ணும் கருத்துநிதம் கண்டுள்கச் செய்தருமம்
எண்ணும் விசயமங்கை, ஏழைமுனம் என்றுறுமோ

ஒரு இராஜதநிலையை முருகன் அருணகிரியாரிடத்தில் வைத்தான். இவ்வருணகிரியார் விஜயத்தைத் தமிழ் நாட்டுப் பெருமக்கள் சுயராஜ்ய தினமாகிய ஆகஸ்டு பதினைந்தாம் தேதியில், சுவாராஜ்ய வைபோகமாகத் திருவண்ணுமலையில் கொண்டாடப் போகின்றனர். திருவண்ணுமலையில் அன்றைய தினம் இகராஜ்ய வெற்றியும் பரராஜ்ய வைபோகமும், பக்தர்கள் அடைந்து முருகன் அனுபூதியில் ஆழ்ந்து வாழப் பெறுவர்; வம்மின் பாருளீர் வம்மின்!

கோகுலாஷ்டமி

(ஆ. கி. ரங்கராஜன்)

சாதுக்களை ரக்ஷிக்கவும், துஷ்டர்களைத் தண்டிக்கவும், தருமத்தை நிலை நிறுத்தவும் யுகம்தோறும் அவதரிக்கும் இறைவன், மாநிலத்தோர் கண்கண்ட தெய்வமாக வணங்கும் கண்ணனுக அவதரித்தான். அற்ப மதியாளருக்கு அந்தகனுகவும், அறிவிற்சிறந்த அடியார்களுக்கு அன்பனுகவும் விளங்கியவன் கண்ணன். தூய்மையும் துறவும் கொண்ட யோகிகளுக்கு, துரிதமாய் அருளும் தெய்வமாய் விளங்கியவன் கண்ணன். கருணையும், தெளிவும், மகிழ்ச்சியும் கொண்ட ஞானியரின் மீது கடைக்கண் நோக்குள்ளவன் கண்ணன். இத்தகைய கண்ணன் கயவரின் கருத்துக்குத் திருடனைப் போலவும் விளங்கி அச்சுறுத்தினன்.

கருணுசாகரனுன கண்ணன் தனது அன்பர்களைத் துன்புறுத்தும் பதிதர்களை நாசமாக்கக் கருதினன். அதோடு அவன் மனிதனேடு மனிதனுக இருந்து மாந்தரை மகிழ்வித்தனன். மக்கள் தர்மத்தின் வழி செல்ல வேண்டுமென்பதையும், நல்வினை, தீவினைகள் மனிதரைத் தொடரும் என்பதையும், பெரியோர்களிடம் தவறு இழைத்தல்

தாழும் படிவினையில் தள்ளாமல் ஆளற்கே
வாழும் வைகாவூர் வரதனருள் வாராதோ?

பேரிடும்பை தரும் என்பதையும் தனது வாழ்க்கையில் நடத்தி நிரூபித்துக் காட்டினன். தான் இறைவன் எனினும், சாதுக்களின் கோபத்திற்கு இலக்காகி அவர்களின் சாபத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம், மானிடர் அறநெறி தவறுதலாலும், பெரும்பிழை செய்தலாலும் ஏற்படும் தீமைகளுக்கு உட்பட்டே ஆகவேண்டுமென்பதை உலகுக்கு அறிவித்தனன்.

கண்ணன் தோன்றிய விதத்தைப் பூங்கோதை மிகவும் அழகாக எடுத்துரைக்கின்றாள்.

> ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
> ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
> தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த
> கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
> நெருப்பென்ன நின்ற நெடுமாலே!......

என்று குறிப்பிடுகிறாள்.

ஆம்! கண்ணன் அவதரித்த விதமே விசித்திரமானது. கம்சன் மாபெரும் துஷ்டன். உத்தமத் தந்தையைக் காராக்கிருகத்தில் இட்டான். உன்னத ஆக்ஷியைக் கைப்பற்றினன், உத்தமர்க்கெல்லாம் ஊறு விளைவித்தனன். எத்தர்க்கு இடமளித்தனன். அவனது கொடுங்கோல் எங்கும் பரவியது. துன்புற்ற மாந்தர்களால் தூய வேள்வியும் அறமும் செய்யத் தவறியதால் விண்மாரி பொய்த்தது. மானிடர் தரும் அவிர்ப்பாகம் முதலியவற்றால்தானே வானகம் வாழ வேண்டும்! இல்லாவிட்டால்......? எனவே அமரர்கள் தங்களைக் காக்க வேண்டி அச்சுதனை அடைக்கலம் புகுந்தனர். அன்புக் கடலில் அமர்ந்து அன்புத் தேவியருடன் கலந்து அன்பே உருவாக விளங்கும் அருளாளன், அவர்களின் கோரிக்கைக் கிணங்கி அவனியில் அவதரித்தனன்.

தமயன் கம்சனால் சிறையிடப்பட்ட தேவகி-வாசுதேவர் கட்கு மகனாய்க் காவற்கூடத்தில் நள்ளிரவில் ஜனித்தனன். தான் இறைவனென்பதை அவர்களுக்கு அறிவிக்கக் கரங்கள் நான்குடனும், அவற்றில் சங்கு, சக்கரம், கதை, கமல

வாலிதம்பி பூசிக்க வாய்த்தகுரங் காடுதுறை
ஏலிதயத் தெண்ணரி யிருஞ்சேட்டை தீரேனே

மலர் ஆகியவற்றுடனும், பீதாம்பர உடையணிந்து, முடியில் நவரத்ன கிரீடமணிந்து கோடி சூர்யப் பிரகாசனும்த் தோற்றமளித்தனன். பிறவியின் பயனை எளிதில் அடைந்ததாகக் கருதி ஆனந்தமுற்ற இருவரின் தளைகள் விடுபட்டன. இறைவனின் ஆணைப்படி,வாசுதேவர் அக்காரிருளில் ஆயர்பாடியில் யசோதை இல்லம் சேர்ந்து தமது மைந்தனை அங்குவிட்டு,அங்கு ஜனித்திருந்த மாதவனின் மாயையாம் பெண் மகவை எடுத்துக் கொண்டு திரும்பினர்.

குழந்தையின் அழுகுரல் கேட்டுக் காவலாளர் அறிவிக்கக் கம்சன் விரைந்து அச்சிசுவைக் கொல்ல முயற்சிக்க, அது காளியாகத் தோன்றிக் கண்ணன் தோன்றியுள்ளதைக் கூறி மறைந்தது. கண்ணனைத் தன் வைரியாகக் கருதிய கம்சன், தன்னை அழிக்கத் தோன்றிய கனலாகவும் கருதித் தவித்தனன். அவ்வாறு அவன் தவிக்கக் காரணம் யாது? அவன் அந்தியே உருவெடுத்தவன். அந்திக்கும் அறக்கடவுளான அச்சுதனுக்கும் விரோதம் விளைதல் இயற்கைதானே!

கண்ணனைக் கம்சன் குழந்தைப் பருவத்திலேயே கொன்றுவிட எண்ணினன். பயங்கர அரக்கர்களைக் கண்ணன்மீது ஏவினன். மறைந்து வளரும் மாயக் கண்ணன் மிக எளிதாக அவர்களை வீழ்த்தினன்.

மகபதியின் தருக்கடக்கக் கண்ணன் குன்றினைக் குடையாக ஏந்தினன். மாந்தர்க்கும் ஐந்துகட்கும் இன்னல் விளைத்த காளியன் என்னும் சர்ப்ப வேந்தனை யமுனையின் மடுவினின்று விரட்டினன். குழலூதி உயிர்களை மகிழ்வித்தனன்.

''ஆவணிதனில் தோன்றிய கண்ணன்
ஆவணிதனிலும் விளங்கினன்''

(ஆவணி = ஆவணிமாதம். ஆ + அணி = ஆவணி = பசுக் கூட்டம்)

ஆம். அவன் அவதரித்த நாள் ஆவணிமாதம் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமிதிதி ரோகணி நக்ஷத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு ஆகும். இவ்வாறு அரசகுமாரனாக

அருணகிரி யாகி அருள்கின்ற ஐயா நின்
கருணைப் பழனம் கருத அருளுதியோ

உதித்த கண்ணன், தான் ஏழை பங்காளன் என்பதை அறிவிக்கப் பசுக்கூட்டத்தி னிடையே திகழ்ந்தான். அமரேந்திரனால் "கோவிந்தராஜா!" (பசுக்களையும் மாந்தரையும் பரிபாலிப்பவனே!) எனப் புகழ்ப்பெற்றான்.

கண்ணன் வலி குறையாதது கண்ட கம்சன் அவனை வலுவில் அழைத்து அழிக்க முயற்சித்தான். கண்ணனும் அவனிருப்பிடம் சென்று குவலயா பீடத்தை மாய்த்து, மல்லரை மடித்து, அசுரனும் அற்ப மதியாளனும் அறத்தின் வைரியுமான கம்சனை அழித்தனன். அன்புநெறி நிலைநின்றது. அகிலம் வாழ்ந்தது. இத்தகைய கண்ணனைப் புகழ்ந்து ஆண்டாள் மேலும் பின்வருமாறு பிரார்த்திக்கின்றாள்.

'உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்'

அடியார்க்கு அன்பனாகிய கண்ணனை நாமும் வழிபடுவதுடன், அவனை வழிபட்டு அருள்பெற்ற ஆண்டாளையும் புகழ்வோமாக! அதோடு ஆழிவண்ணனும் ஆழிக்கரத்தனும் ஆகிய அச்சுதன் அவதரித்த இந்த ஆவணி மாதத்தில் வரும் அவனது ஜயந்தியைக், கோகுலாஷ்டமி தினத்தைக் குதூகலத் திருநாளாகக் கொண்டாடுவோமாக!

கண்ணனின் அருளால் காசினி வாழ்க!

முருகனடியார் 17

ஏழுமலை யந்தணர்

(ரசபதி)

திருவார்ந்த வளத்தை உடையது திருவனந்தபுரம். அப்பதியில் பல அந்தணர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் ஞான சாகரர். அவர் ஓயாமல் வேதம் ஓதுபவர்.

மாபெரும் கற்புடையவர் அவர் மனைவியார். மணம் செய்த நாள் முதல், மணாளரைத் தெய்வமென்று மதித்தவர். அவர் பெயர் மாலினி.

வாசிகத்தில் இல்லைபயன் வாணாள் கழிந்ததுவே
தேசிக! நின் ஐயாற்றைத் தேர்ந்துமுழுக் காடேனே

அவர்கள்தம் இல்லற வாழ்வில், பிள்ளைகள் எழுவர் பிறந்தனர். மூத்தவன் வயது பத்து. எவரினும் இளையவன் வயது இரண்டு. பள்ளியில் நான்கு பிள்ளைகள்; வீட்டைச் சுற்றி, மூன்று பிள்ளைகள் விளையாடி வருவர்.

பொருட் செல்வத்தில் பூரித்தோர்; கலைச் செல்வத்தில் களித்தவர்; பக்திச் செல்வம் பலித்தவர்; யோகானுபவம் கைவந்தோர்; இங்ஙனம், சிறந்த ஞானசாகரரின் சீடர் பலர்.

எவரிருந்து என்ன பயன்? ஏழை மாணவர் அளித்த சொற்ப ஆதரவால், நல்லற இல்லறம் நடந்தது. இந்நிலையில் ஞானசாகரர் மனையறம், வறுமை சாகர வளத்தை யறிந்தது. ஈஸ்வர சங்கற்பம் என்ற நினைவு, அமைதியைத் தம்பதிகட்கு அளித்தது.

* * *

ஒரு நாள், சிறக்க முடிந்தது சிவ பூஜை. ஞானசாகரர், சம்போ! சங்கரா!! என்று விழுந்து வணங்கினர்; மீட்டும் எழுந்திலர். நெடுநேரம் இந்நிலை. மயங்கியது மாலினி மனம். தூய மேனியைத் தொட்டார். சிறந்த கணவர் மேனி சில்லிட்டது.

ஹா! என்று அலறினர். இதயம் வெடித்தது. அவர்மேல் விழுந்தார். அவ்வளவுதான்.

வீதியில் விளையாடி யிருந்த மூன்று சிறுவர்க்கும் பசி மூண்டது.

அம்மா! அம்மா!! பதிலே இல்லை. வீட்டுள் நுழைந்தனர். தாய் தந்தையர், ஒரே இடத்தில் உறங்குவதாக, அவர்தம் பிஞ்சு இதயங்கள் எண்ணின. இருவர் இப்பால்; ஒருவன் அப்பால்.

எழுந்திரு அம்மா! பசிக்குதே! அம்மா! அம்மா!! என்று அலறினர். வர வர அழுகை வலுத்தது.

பகல் உச்சி வேளை. பள்ளியி லிருந்த சிறுவர் நால்வரும் வந்தனர். அருமைத் தம்பியர் அழுகை கேட்டது. விரைந்து வீட்டுள் நுழைந்தனர்; அலங்கோல நிலையில், தாயும் தந்தையும் குப்புற விழுந்து கிடந்தனர். ஐயுற்றது மனம்.

அம்மா! அப்பா!! என்று அழைத்தான் மூத்தமகன். பதில் இல்லை. என்ன இது என்று நால்வரும் அணுகினர். மார்பைத் தொட்டனர். முகத்தில் கை வைத்தனர். மூச்சு இயக்கம் இல்லை. உண்மை உணர்ந்தனர். ஐயோ தெய்வமே! என்று, எழுவரும் பொருமி யழுதனர்.

சிறகொடிந்த பறவைகள்போல், எங்களைச் செய்துவிட்டாயே அம்மா! இவ் வயதில் எங்களை நட்டாற்றில் விட்டீரே அப்பா! அப்பா!! என்று அலறினர். விஷயம் உணர்ந்த மற்றப் பிள்ளை

காலைமலர் தூவும் கருத்துணர்த்தி, நெய்த்தான
ஆலயத்திற் சேவைதரும் அந்நாளும் எந்நாளோ

களும், கதறிய நிலை, கேட்கவே சகிக்கவில்லை. இரண்டு வயது சிறுவன், அம்மா! அம்மா!! என்று வீரிட்ட செய்தி, வீட்டுக் கூரையையே பிய்த்தெறிந்து விடும்போல் இருந்தது. பரிதாபமான இச் செய்தி, எங்கும் பரவியது. ஊரே திரண்டது. ஞானசாகரர் பெருமையை, ஓயாமல் பேசினர் பலர். என்ன அருமையான பதிவிரதை என்று, மாலினியைப் போற்றினர் மாதர்கள்.

பலருடைய முயற்சியால், தம்பதிகட்கு தகனக்ரியை நடந்தது. நியதியாக, இறுதிச் சடங்கும் நிறைவேறியது.

இளம் பிள்ளைகளின் கதி என்ன? எவரும் அதை எண்ணிலர். வளர்ச்சி செய்யும் படிப்பிற்கு, இனி வழியில்லை. இளம் சிறுவர் மூவர்மேல், குடும்பப் பொறுப்பு ஏறியது.

* * *

ஞானசாகரரிடம் கற்று, முன்னுக்கு வந்தவர்கள் அவ்வூரில் பலர் உளர். அந்தத் தைரியத்தால், அவர்களுள் சிலரைப் பிள்ளைகள் அணுகினர். ஆரம்பத்தில் சிறு சலுகை. வர வர அதுவும் வரண்டது. ஆலய குருக்கள்மாரை அணுகினர். காக்க மனமின்றி, அவர்களும் கைவிட்டனர்.

ஏதாயினும் தொழில் கிடைக்காதா என்று எங்கெங்கேயோ முயன்றனர். ஒரு பயனும் இல்லை. ஒரு நாள், அதிகம் கெஞ்சிக் கொஞ்சிய பிள்ளைகளிடம், வாடும்படி உழைப்பை வாங்கிக் கொண்டு, உழக்கு நொய்யை ஊரில் ஒருவர் உதவினர். கற்றவரோ, வாயளவில் வருத்தம் காட்டினர்.

கட்டை வெட்டி, கட்டு கட்டி, வீதியில் விலை கூறி விற்றனர். அதையும் ஒருவர் அரை விலைக்கு வாங்கினர். இங்ஙனம் படாத பாடு பலபட்டு, மூவரையும் நால்வர் வளர்த்தனர்.

வாழ யாது வழி? என்றும் அரை வயிறும் கால் வயிறும் தானா? எத்தனை நாள இந்த வேதனை?

ஒரு நாள் நள்ளிரவு. அடுத்த வீட்டில் ஒரு பிரபு இருக்கிறார். அவர் வீட்டுள் இரு கள்ளர் நுழைந்தனர். கவர்ந்ததை மூட்டை கட்டினர்; வெளியே கொணர்ந்தனர். இரவெலாம் உறக்கம் இன்றி இருந்த எழுவரில் இருவர், ஆளரவம் கேட்டு, வீட்டை விட்டு வெளியே வந்தனர். கள்ளர்களைக் கண்டனர். மனம் பதைத்தது.

என்ன அநியாயம்? நில்லுங்கள்! போகாதீர்கள் என்று நெருங்கினர்.

திருடர் இருவருள் ஒருவன் முரடன்; முன் வந்த மூத்தவனை முகத்தில் குத்தினான். ஐயோ என்றலறினன் அண்ணன். மூக்கில் உதிரம் ஒழுகியது.

திக்கார் பெரும்புலியூர்த் தேவே!நீ எற்கருளப்
புக்கால்,உனை மறுப்பார் உண்டோமெய்ப் புண்ணியனே

அடேய்! அடேய்! என்று தடுத்த தம்பியை, அடுத்த திருடன் எட்டி உதைத்தான். பாவம் அவன், அம்மா என்று வீரிட்டு அலறி, தூரத்தில் போய் விழுந்தான். அதன் பின், பறந்தோடினர் கள்ளப் பாதகர்.

இந்த ஆரவாரத்தால், விழித்தனர் பிரபு வீட்டவர். தடியும் தாம்புமாக, ஆட்களுடன் ஓடி வந்தனர். வேதனைப்படும் பிள்ளை கள்மூலம், விஷயம் இன்னதென்று விளங்கியது. கள்ளர்கள் சென்ற திசை நோக்கி ஓடினர். ஒருவன்கூட அகப்படவில்லை. தேடி யலுத்துத் திரும்பினர்.

அடிபட்ட சிறுவர் இருவரும், பத்து நாளாகப் படுக்கை விட்டே எழுந்திலர். எவரும் அவர்களை ஏனென்றும் கேட்கவில்லை, ஏறெடுத்தும் பார்க்கவில்லை. என்ன உலகமோ இது?

இருவர் படுக்கையில். மூவர் சின்னஞ் சிறுசுகள். இரக்க மற்ற மக்கள் நடுவில், மற்ற இருவர் என்ன சாதிக்க முடியும்? ஏக்கம் வலுத்தது.

*   *   *

பட்டினிக் கொடுமையால், நித்திரை வரவில்லை. ஏழுபேரும், புரண்டு புரண்டு படுக்கின்றனர். குளிர்ந்த நீரை, மாறி மாறி எழுந்து குடித்தனர். இரவு மணி ஒன்று.

கூரைமேல் இருந்து, நடுவாசலில் ஒருவன் தொப்பென்று குதித்தான். அஞ்சிய பிள்ளைகள் அலறினர்.

பயப்படாதீர்கள்! உங்கள் தந்தையிடம், இளமையில் கல்வி சிறிது கற்றவன் நான். ஏழ்மை இம்சித்தது. ஒரு தொழிலும் கிடைக்கவில்லை. கள்ளர் கூட்டத்தில் கலந்தேன். அதன் பின், ஏதோ ஒருவாறு ஜீவனம் நடைபெறுகின்றது.

நேர்மைக்கு, இல்லை உலகில் இடம். எவரும் வஞ்சகர்; உள்ளொன்று, புறமொன்று; போலிப் போர்வை; மாபெரும் உலகம் அவர்களை மதிக்கின்றது. எங்கள் செய்தி நேர் நடை. திருடர் என்றால் திருடர்கள்தான். பழைய நன்றி பாதித்தது. வந்தேன். இதோ ஒரு முடிப்பு. இது சொல்ப அளவு. அடுத்த காட்டிற்கு வாருங்கள். ஆதரவு உங்கட்கு அளிக்கப்படும். தர்மம், சத்யம், மனசாட்சி இந்த பழைய சம்பிரதாயங்களை எண்ணினால், வயிறு காய்ந்து வாட வேண்டியதுதான். வருகிறேன் என்று, மின்னல் போல் ஓடி மறைந்தான் வந்தவன்.

இச் சம்பவம், ஆரம்பத்தில் சிறிது அதிர்ச்சியை அளித்தது. ஏழெட்டு நாட்களாக, எண்ணுதும் எண்ணினர். ஏக்கம் வலுத்தது. முடிப்பு கரைந்தது. மோசமான பசி, குடரை முறுக்கியது.

தன்னையறி வார்நின் றனையுணரில், மெய்ஞ்ஞான மன்னே மழபாடி! என்மனத்தில் வைகாயோ

முடிவு என்ன? பிறந்த இடத்துப் பெருமையை எண்ணினர். கண்ணீர் பெருக்கினர். காட்டை யடைந்தனர்.

ஒன்றன் பின் ஒன்ருய், ஏழாண்டுகள், போகிறேன் என்று போயின. வருகிறேன் என்று எட்டாவது ஆண்டும் வந்தது.

* * *

திடீர் திடீர் என்று நகரெங்கும் திருடர் பயம் அதிகரித்தது. பெரிய பெரிய பிரபுக்களின் பெருஞ் செல்வம் கொள்ளை போயின. கள்ளரைப் பிடித்துக் கொடுப்பவர்க்கு, ஆயிரம் பொன் என்று முரசு எங்கும் முழங்கியது. சூழ்ச்சிப் புயல் எங்கும் சுழன்றது. அதன் பயனுக, மூர்க்க ஆவேசம் மூண்டது.

கள்ளரைப் பற்ற முயன்றவர் காணுது போயினர். நள்ளிரவில், அவர்கள் தலைகள் அவரவர் வீட்டில் வந்து விழுந்தன. கணவரை இழந்தவர்க்குக் கணக்கில்லை. மக்களை யிழந்தவர், தந்தையை இழந்தவர், வீடுகள் தோறும் பெருகியது அழுகை. ஐயோ! இது என்ன கோரம்! விளக்கு வைத்த பின், வீதியில் நடமாடவே எவரும் அஞ்சினர்.

* * *

குடகு மலையில் ஒரு **யோகியார்**. உத்தம ஞானசாகரரிடம், அவர் உபதேசம் பெற்றவர். அரிய சாதனையை வளர்க்க அம் மலைமேல் இருந்தார். வாழ்விக்கும் சித்தி வளர்ந்தது. அங்கிருந்து புறப்பட்டார். வழி காட்டி வாழ்வித்த குருவை, வணங்க எண்ணியது மனம். திருவனந்தபுரம் வந்தார். இனிய குருநாதர் மாளிகை, இடிந்து கிடந்தது. திடுக்கிட்டது மனம்.

பலரிடம் விசாரித்தார். விஷயம் சிறிது விளங்கியது. பிள்ளைகள் போன இடம், எவரும் தெரியவில்லை என்றனர். அதனுடன், கள்ளர்களால் ஊரே கலங்குவதையும் யோகியார் கண்டார்.

காணக் கிடைக்காத மாணிக்கமான ஞானசாகரர் குடும்பத்தை, பொறுப்பற்றுக் கைவிட்ட இவர்கட்கு, வேண்டியதுதான் இத்தண்டனை! இறைவன் திருவுளத்தை எவரே அறிவார்? என்று மொறு மொறுத்தது முனிவர் வாய்.

குரு புத்திரர்கள் எங்கிருந்தாலும் தேடிப் பிடி! வாழ அவர்கட்கு வழிகாட்டு! என்கிறது மனச்சாட்சி. மனம் போன திசையெல்லாம் போய்த் தேடுகிருர்.

* * *

இரவு மணி பன்னிரண்டு. பயங்கர கானகம். ஒரு இடத்தில் மினுக் மினுக்கென்று ஒரு விளக்கொளி. ஆறுமுகப் பெருமானைச் சிலர் ஆராதிக்கின்றனர். மெள்ள மெள்ள அங்கு யோகியார்

வஞ்சப் பிறப்பறுக்க வாழ்பழூர் ஐய! நினைத்
தஞ்சம் புகுந்தடியேன் தற்காப்பு கொள்வேனே

அணுகினர். என்ன வியப்பு! இங்கும் உளதே எம்பெருமான் வழிபாடு என்று எண்ணியது இதயம். கனிந்த அவர்கள் பக்தி கண்டு, உருகியது உள்ளம்.

நானும் வழிபாட்டில் கலந்து கொள்ளலாமா? என்று சொல்லிக்கொண்டே, திடீர் என்று அவர்கள் எதிரில் தோன்றினர்.

வேவு பார்க்க எண்ணுவார்க்கு என்ன கதி தெரியுமா? என்று கர்ஜித்தான், அவர்களுள் ஒருவன்.

என்ன சொல்கிறீர்? வேவு பார்க்கிறேனா? நீங்கள் யார்?

இதோ அதற்குப் பதில் என்று வாளை உருவினான் ஒருவன்.

அடடே! பொறு பொறு என்றார் யோகியார்.

இதற்குள், அவர் இதயத்தைப் பதம் பார்த்தது மற்றொருவன் ஈட்டி.

ஹா! ஞானசாகர குருநாதா! என்று வீறிட்டுக் கூவி யோகியார் வீழ்ந்தார்.

அதிர்ந்தது அங்கிருந்தோர் மனம். அண்மையில் ஒருவன் அமர்ந்தான். மற்றவர், படபடத்து முன் வந்து மொய்த்தனர்.

ஐயா! இப்போது தாங்கள் கூறிய பெயர் யாருடையது?

ம்...ம்...ம்... திருவனந்தபுரம் வேத வித்தகர் பெயர் அது. ம்...ம்...ம்... அவர் மாணவன் நான். ம்...ம்...ம்... குடகு மலையில்...ம்... தவங் கிடநதேன். வாழ்வித்த குருநாதரை சேவிக்க வந்தேன். உற்றதை உணர்ந்தேன். உயர்ந்த அவர் பிள்ளைகளைக் கண்டு பிடித்து, பெற்றிருக்கும் சித்தியால் அவர்கட்குப் பேருதவி செய்ய எண்ணினேன். அதற்குமுன், ஆண்டவன் திருவுளம் இப்படி. ம்...ம்...ம்...என்று வேதனையோடு வந்தது வார்த்தைகள்.

ஐயோ ஸ்வாமி! அப்படியா செய்தி? நீங்கள் தேடி வந்த மகா பாவிகள் நாங்கள்தான். ஊரார் உதவ மறுத்தனர். சந்தர்ப்ப வசத்தால், கள்ளராயினோம். இன்று குடும்பக் கவலையே இல்லை. பழைய கள்ளர்கள், ஒவ்வொருவராக மாய்ந்தனர். அவர்களுடைய மாய வித்தையில் பழகிய நாங்கள், கொள்ளையும் கொலையும் ஆயிரம் செய்தோம் என்று எழுவரும் பொருமி யழுதனர்.

என்ன? ஹா! அந்த வேதப் பெருந்தகையின் பிள்ளைகளா நீங்கள்? சீர்கெட்ட விதி இப்படியா சிரித்தது? ஐயோ! என்னால் நம்பவே முடியவில்லையே! ம் . ம்...ம்... என்ன? மகத்தான அப் புனிதவதியின் மக்களை உலகம் இப்படியா கைவிட்டது? பாராட்டத்தக்க குடும்பங்கட்கு இந்நிலை நீடித்தால், அழியும் இந்த உலகம்! ஒழியும் இந்த ஞாலம் என்று கூவிக் குப்புற்ற யோகியார், பாப பரிகாரமாக, இதுவரை வழிபட்ட, புனித ஆறுமுகத்தையே போற்

ஐயா திருக்கானூர் அத்தா! இனும்பிறப்பில்
வையாதே என்றடியேன் வாய்திறப்ப தோராயோ

றுங்கள்! வாழ அது ஒன்றே வழி என்று அலறினர்: தொங்கியது தலை. உருண்டது நிலத்தில் அவர் உடல்.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு, அழுது கதறினர் எழுவரும்! இளமையில் பெற்றோரை இழந்தோம். காப்பளித்த கள்ளர்களும் கால் சாய்ந்தனர். வழுக்கிய எங்கட்குக் கை கொடுக்க வந்த வள்ளலையும் கொன்றோமே! ஐயோ! ஐயோ!! எம்போலும் பாவிகள் யார்? என்று வெய்யிலில் புழுவைப்போல் வெம்பினர். பொழுது விடியும்வரை ஓவென்று கதறிய அவர் ஒலி, கானகமெங்கும் எதிரொலித்தது.

வைகறையில் பெய்த பனி, இவர்கள் நிலை கண்டு காடு சிந்திய கண் மழை போல இருந்தது.

* * *

திருவனந்தபுரத்தில் ஒரு பெரிய அதிசயம். சில நாளாக, அவரவர் இழந்த பொருளில் பெரும்பகுதி, வீடுதோறும், இரவு வேளையில் முடிப்பு முடிப்பாக வந்து விழுகின்றன. அஞ்சிய வீட்டவர் அவிழ்த்த போது, மன்னிக்க வேண்டும் என்று எழுதிய ஒரு ஓலையும், அவைகளில் இருந்தன. பொழுது விடிந்த பின், எங்குமே கூடிக் கூடி, பெரிதும் இது குறித்தே எவரும் பேசுகின்றனர்.

* * *

பழைய பாபங்கட்கு சிறிது பரிகாரம்; இந்த அளவில் ஆறுதல் கொண்ட எழுவரும், காட்டைக் கடந்து, அதோ போய்க்கொண்டே இருப்பதைப் பாருங்கள்! எங்குப் போகிறோம் என்பதை அவர்களே அறியார். மனம் போன போக்கில் போகின்றனர். அதோ தெரிகிறது, எண்ணினர்க்குப் பேறு தரும் அண்ணாமலை. அப்பதியை அணுகினர்.

மலைமேல் ஏறினர்; ஏன் ஏறுவது? அவர்கட்கே அது தோன்றவில்லையே. ஏன்னமோ ஏறுகின்றனர். அவ்வளவுதான்.

அதோ ஒரு குகை. கண் விழித்திருக்கிறார் ஒரு **யோகியார்.** இனிய அவர் பார்வை, அவர்களை ஈர்த்தது. ஓடி வந்தனர். அருந்தவ முனிவர் அடிகளில் வீழ்ந்தனர். ஏதோ அவரிடம் சொல்ல வேண்டும்போல் தோன்றியது. புதைந்த துக்கம் பொங்கி எழுந்தது.

ஸ்வாமி! நாங்கள் பாவிகள்; மன்னிக்க முடியாத மாபெரும் குற்றவாளிகள்! உடல் வளர்க்கச் செய்த தீமைகட்கு ஒரு அளவே இல்லை. என்ன செய்வது என்றும் தோன்றவில்லை. ஆ அ அ அ என்று அலறி உலறி அழுதனர்.

இரக்க மிக்க முனிவரர், உள்ளக் கண்கொண்டு அவர்கள் நிலையை உணர்ந்தார்.

பாராய் அருள்விழியால், பண்ணுய் அருட்பதிவு
வாராய், திருவாலந் துறையாய்நீ வாராயோ

அஞ்ச வேண்டா! பிறந்த இடம் பேறுடையது. இடையில் கிடையாய நடை. எனினும், முன்செய் புண்ணியம் பின் வந்து உதவியது. குற்றம் உணர்ந்து குமுறும் நிலை, ஆகூழ் நேர்ந்ததற்கு உள்ள அறிகுறி. அண்ணாமலையார் உங்கட்கு அருட்பாலிப்பாராக!

இதற்கு மேற்கே இருக்கிறது வசுபுரி. அதனைச் சார்ந்துளது சப்தகிரி. அதன்மேல் ஏறி, ஏத்துங்கள போற்றுங்கள்! ஆறுதல் விளைவிக்கும் ஆறுமுகம். கலியிற் காப்பளிப்பவன் கந்தப்பிரான்.

இப்படி அருகில் வாருங்கள் என்று, அவர்களை அருளொடு அழைத்த யோகியார், ஏதோ உரிய மந்திரத்தை உபதேசித்தார். தொடர்ந்து உருவேற்றுங்கள்! கர்மம் கழுவப்படும். போய் வாருங்கள் என்று ஆசி கூறி அனுப்பினர்.

வணங்கிய எழுவரும் விரைந்தனர். குறித்த இடத்தை அடைந்தனர். ஏழு பிரிவான மலை அது. ஒவ்வொரு பிரிவில் ஒவ்வொருவர் ஏறினர்.

அகம் புறம் தூய்மை செய்தனர். வடதிசை நோக்கினர்; பத்மாசனம் இட்டனர்; கைகுவித்தனர்.

மயில் ஏந்திய மழவா! அயில் ஏந்திய அமலா! அருள் கோல் ஏந்திய அறவா! தண்மையிலாத பாவியேம்! வெகு தவறுகள் இழைத்த வினையினேம்! உண்மை நேர்மை யிலாத உலுத்தரேம்! வீழ்த்திவிடு! வேலால் எம்மை வீழ்த்திவிடு! சூரபதுமன் முதலினோரை வாழ்வித்த வேல், வீழ்த்துமேல் எம் வினைப் பெருக்கம் வீழ்ந்துவிடும்.

உமாசுதாய நமவோம்! முருகாய நமவோம்! குமாராய நமவோம்! குகாய நமவோம்! விசாகாய நமவோம்! மயூராய நமவோம்! வேலாய ,நமவோம்! வேலாய நமவோம்! வேலாய நமவோம்! என்று இடையறாது உருவேற்ற லாயினர். காற்றே உணவு. இரவும் பகலுமாகப் பலகாலம் உருண்டு இங்ஙனம் ஓடின.

ஏழு மலையிலும் எழுந்த இனிய அந்த ஒலி, விண்ணளாவி எங்கும் வியாபித்தது. மலையடிவாரத்தில் வருவார் போவார்க்கு, அவ்வொலி உறுமல், அச்சத்தையே பெரிதும் அளித்தது. விலங்கினங்களும், பறவைகளும் அஞ்சி விலகின. ஓயாது ஒலித்த அத் தெய்வ மந்திரக் கனல், விசிறிச் சுவாலையாகி, செடி கொடிகட்டும் விபரீதம் செய்தது.

அரக்கர் குலம் கருவறுத்த ஆண்மை வேல், அன்பர் உளத்தில் ஞானஒளி நாட்டும் அருள் வேல், உமையாள் குமாரன், எமையாள ஏரகன் எண்மை வேல் எழுந்தது. தாகம் தாங்க முடியாமல்

நின்று சிறிதேநீ நின்னுளத்தில் எண்ணுதியேல்
துன்றுவினை மாந்துறையாய் தொய்ந்தொழிந்து போகாதோ

த்வித்தது. ஊங்காரம் எழுப்பிய ஓங்கார வேலின் அதிர்ச்சியால், ஏழு மலைகளும் பிளந்தன; அவைகளி லிருந்து சிறக்கப் பெருகியது சேயாறு. அதனில் முழுகித் தாகம் தணிந்த தனிவேல், எழுவர்தம் இதயம் புகுந்து இன்ப நிருத்தம் செய்தது. புறம்போந்து, அவர்கள் கண்கள் கண்டுகளிக்க புனித நடனம் புரிந்தது. அகத்தும் புறத்தும் எழுந்த வேலின் அருள் ஒளியால், பாவ இருள் பறந்தது.

கொக்கரக்கோ என்று கூவியது அருள்நாதச் சேவல். அடுத்து எழுந்தது ஆறுமுகம். வந்தோம் வந்தோம் என்று மலரடிச் சிலம்புகள் குதூகலித்துக் கொஞ்சின. அணி பல அணிந்த அன்னையருடன், மயில்மேல் ஏறி, காட்சி வழங்கினன் வரத குகன்.

எழுந்த எழுவரும், எம்பெருமா! ஆறுமுக அப்பா! என்று விழுந்து வணங்கி, ஆனந்தக் கண்ணீரால் அம்மான் திருவடியை அபிஷேகித்தனர்.

பிரபுவின் பேரருளால் இடர் விளைவிக்கும் பிறப்பகன்று, எழுவரும் செவ்வேள் உலகம் சேர்ந்தனர். அறுமுகத்தை எழுவரும் சேவித்து, இன்பம் எய்தி இருந்தனர். வேலின் தாபம், இவர்தம் பாபம் தவிர்த்திடு தாகம்தானோ என்னவோ? யார் அறிவார் அதன் உண்மையை!

வாழ்க முருகன் அடியவர்!

மலர் 2

சிந்தனைக் கொத்து
(V. R. G.)

கீழ்நோக்கும், மேல் நோக்கும்.

பெரிய ஏரிகள், குளம், குட்டைகள், நதிகள் இவைகளிலுள்ள நீர், மழை பெய்ததால் கண்ட கண்ட இடங்களில் தேங்கிய அசுத்தம் நிறைந்த ஜலம் யாவும், சூரிய வெப்பத்தால் உஷ்ணமடைந்து, ஆவி ரூபமாகி தன் அசுத்தம் முதலிய மாசுகள் நீங்கப் பெற்று, மிகப் பரிசுத்தமாய், உயர்வு தாழ்வு என்ற பேதமற்று, எல்லா நீர் நிலைகளி லிருந்து வந்த நீராவிகளெல்லாம் ஒரே கூட்டமாய்ச் சேர்ந்து, மேக ரூபமாகி வானத்தில் கூடிவாழ்கின்றன. உல

கருப்பா சயத்திருந்த கன்மவினை யாலே
திருப்பாற் றுறையைத் தேறேனை யாளுதியோ

கிலுள்ள சகல ஜீவராசிகளும் மனிதர்களும், அவைகளின் தயவை எதிர்பார்க்கக் கூடிய உன்னத பதவியை வகிக்கின்றன.

அதே போல் நாம் எக்குடியில் பிறந்தவராயினும், எவ்வளவு கீழான நிலைமையில் இருப்பினும், கல்வி கேள்விகளால் வளரும் அறிவெனும் சூரிய வெப்பத்தால், மனமாசு எனும் மலங்கள் நீங்கப் பெற்று தூய்மை யடைவோமாயின், யாவரினும் உயர்ந்தவர்களென உலகம்போற்றப் புகழும் பதவியும் அடைவோம் என்பது நிச்சயம்.

உயர்ந்த மலைகளில் உற்பத்தியாகும் அருவிகளும் நீர் ஊற்றுக்களும், இயற்கையாகவே மிகப் பரிசுத்தமுள்ளவைகளா யிருப்பினும், கீழ்நோக்கிப் பாயும் தன்மையை அடைந்துள்ளதால், பள்ளங்கள் தோறும் பாந்து சென்று, தாழ்வான பூமியை நோக்கி விரைந்து, வெவ்வேறு நிலங்களின் குணு குணங்களைப் பெற்று ஓடி, இறுதியில் மிக உப்பு நிறைந்த சமுத்திரமென்னும் தேங்கு ஜலத்தில் வந்து அடங்கி விடுகின்றன!

அவ்வாறே நாம் குலத்திலும், செல்வம், கல்வியிலும் எவ்வளவு உயர்ந்தவர்களா யிருந்தாலும், நம் மனோவேகத்தின் வசப்பட்டு, சிந்தனையிழந்து கீழ்நோக்கம் கொள்ள இசைவோமாயின், பூமியிலுள்ள நதிகளைப்போல சிலகாலம் பலவிதமான தோற்றமளித்தாலும், கடைசியில் தாழ்வு எனும் சமுத்திரத்தில் வந்து அடங்கி விடுவோ மென்பது திண்ணம்.

ஆசையின் காரணம்

நம் மனதானது ஒரு பொருளின் மேல் அதிகம் பிரியம் கொள்கிறது. அதை நாம் விரைவில் அடைய வேணுமென மிகுந்த விருப்பம் உண்டாகிறது. நம் மனதுக்குகந்த அப் பொருளை அடையும்வரை நமக்கு அதன் மேலுள்ள ஆசையும் பிரேமையும் மலைபோல் வளர்கின்றன.

பாசம் அகற்றிஅருள் பாலிக்கும் ஆனைக்கா
நேசமுடன் என்னுணர்வில் நிற்க அருளுதியே

அந்தப் பொருளை நாம் அடைந்த பின், அதன்மேல் நமக்கு அதுவரை யிருந்த ஆசையும் பிரேமையும் தேய்பிறை யென்ன வரவரக் குறைய ஆரம்பித்து, கடைசியில் ஒன்று மில்லாது போய் விடுகிறது.

இதற்குக் காரணமென்ன? உண்மையில் நாம் எதிர் பார்த்த பொருளுக்கே நமக்கு ஆசையை உண்டாக்கக் கூடிய சக்தியிருந்தால், அதை நாம் அடைந்ததும் அந்த ஆசை வரவரக் குறைந்து போகக் காரணமில்லை. ஆசையும் பிரேமையும் அப்படியே நிலைத்திருக்கும்.

ஆகையால் ஆசையும் பிரேமையும் உண்டாக்கும் சக்தி உலகில் எந்தப் பொருளுக்குமில்லை. நம் மனதுதான் எல்லாவற்றிற்கும் காரணமாகும். ஒரு க்ஷண நேரத்தில் மலைபோல் ஆசையை யுண்டாக்கி, மறுகணம் யாதொரு காரணமுமின்றி அதை மறையச் செய்துவிடும். என்னே மனதின் சாகஸம்! இந்த உண்மையை நாம் நன்கு உணர்ந்து கொள்வோமாயின், ஒவ்வொரு சமயம் நாம் ஆசை வெள் ளத்தால் தாக்கப்பெறும் பொழுது, உண்மை நிலையை சிந்தனை செய்து அவ்வாபத்தினின்றும் விலகும் வன்மை யைப் பெறுவோம்.

கல்லாரே நல்லார்

கல்வியானது நம் அறிவைப் பிரகாசப்படுத்தும். அந் தப் பிரகாசத்தை மங்காமல் காப்பாற்றி, அதனால் பய னடைய சுயநலமற்ற தன்மையும், தன்னடக்கமும், மனத் தூய்மையும் அவசியம் வேண்டும். இல்லாவிடின் இக்கல்வி யறிவின் வன்மையானது இதுவரை நமக்கிருந்த தன்னடக் கத்தையும், சீலத்தையும் சீர்குலையச் செய்து, யுக்தி வாதங் களால் மனம்போன போக்கில் செல்லத் துணிவு தந்து நம்மைத் தாழ்த்திவிடும். தன்னடக்கமற்ற புத்தி கூர்மை யால் இன்னலே விளையுமென்பது நிச்சயம்.

பரமன் திருப்புகழைப் பாடிப் படித்தே
கரங்குவியப் பைஞ்ஞீலி காணுவதும் என்றேயோ

ஒரு குதிரை எவ்வளவுக் கெவ்வளவு வலுவுள்ளதாயும் மிக வேகமாய் ஓடக்கூடிய சக்தியுடனும் இருக்கிறதோ, அதற்குத் தகுந்த உறுதியான கடிவாளமும், சாமர்த்தியம் நிறைந்த சாரதியும் வேண்டியதவசியமாகிறது. இல்லாவிடின் அக்குதிரையால் அபாயமே நேரிடுமல்லவா?

கிராமாந்திரங்களி லுள்ளோரில் பலர், கல்வி கேள்விகளில் மிகக் குறைந்தவர்களே. இருப்பினும், முன்னோர்கள் நியமித்துள்ள பழக்க வழக்கங்களில் நம்பிக்கையும், அபவாதத்திற்கு பயப்படும் தன்மையும் உள்ளவர்கள் ஆதலால், ஒரே நியதியான வாழ்க்கையை நடத்துவதுடன், ஊருடன் கூடி வாழ்ந்து நிம்மதியை அடைகிறார்கள். நிம்மதியான வாழ்க்கையை நடத்துவது அவர்களுக்கு இயல்பாகவும் சுலபமாகவும் அமைந்திருக்கிறது. இதற்குக் காரணம் கட்டுப்பாடான நெறியில் அவர்களுக்குள்ள நம்பிக்கையேயாம்,

இவ்வுண்மையை நாம் நன்கு அறிந்து கொள்ளும் பொருட்டு பக்தி வள்ளலாகிய தாயுமானவர்,

"கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள்"

என அருளியுள்ளார். இருமுறை நல்லவர்கள் எனக் கூறிய தன் காரணம், கல்வி யறிவைவிட நல்லொழுக்கமே மிகச் சிறந்ததெ்தன நாம் நன்கு உணரும் பொருட்டேயாம்.

மனிதனின் உரைகல்

தங்கத்தினுடைய உயர்வை அதன் மாற்று இவ்வளவு என்பதை அறிந்தே மதிப்பிடுகிறோம். அதன் மாற்றை அறிவதற்கு உரைகல் உதவியாயிருக்கிறது. அவ்விதமே மனிதனுடைய தகுதியை மனம், வாக்கு, செயல் எனும் உரைகல் மூலம் அறியலாம். மனிதனின் உயர்வை மதிப்பிட இவைகள் அளவு கோலாக இருக்கின்றன.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"
"படிப்பின் அளவு வார்த்தையால் விளங்கும்"
"பண்பின் உயர்வு செயலில் காணலாம்."

இவைகள் முதியோர் வாக்காகும். பழைய காலம் முதல் கொண்டே இவ்வுரைகல், இவர்கள் உபயோகத்தில் இருந்து வந்திருப்பதை இப் பழமொழிகள் நமக்கு நன்கு அறிவிக்கின்றன.

நம் மனதில் உதிக்கும் நல்ல எண்ணங்களை, செயலில் காண்பித்தலே நம் பூரண உயர்வை நிரூபிக்கும் உரை கல் லாகும். அங்ஙனம் இன்றி அவ்வெண்ணங்களை வாக்கால் வெளியிட்டு அத்துடன் அதை விட்டு விடுதல் மத்திம மாகும். அதுவுமின்றி நல்ல எண்ணங்களை உதித்த இடத்தி லேயே அடக்கி விடுதல் நிஷ்பலனாகும்.

இவ்வாறே நம்மனத்தில் உண்டாகும் நல்லது அல்லாத எண்ணங்களை, கோபம், அகங்காரம், வருத்தம் முதலான மனோ வேகங்களை, அவைகள் உதித்த இடமாகிய மனதி லேயே அடக்கிவிடுதல் நம் தகுதியின் உயர்வை நன்கு அறி விக்கும். அன்றி அவைகளை வாக்கால் வெளியிட்டு மன ஆறுதலடைதல் மத்திமமாம். இவ்வாறின்றி, துணிந்து செயலில் இறங்குவதானது, நம் தகுதியைப் பூரணமா யழித்துவிடும்.

நாம் இந்த உரைகல் பரிசோதனையில் வெற்றிபெற, மன அடக்கமும், அறிவின் உதவியும் வேண்டும். நல்லார் இணக்கமும் திருமுருகனின் மெய்யடியார்களின் சேர்க்கை யுமே மன அடக்கத்தையும், அறிவின் வளர்ச்சியையும் அளிக்க வல்லது. திருமுருகன் திருநாம ஸ்மரணையும், திருப்புகழ்களை மனங்கனியப் பாடித் தொழுகையும் நம்மை அறிவிலும் தகுதியிலும் உயர்ந்தவனாக்கிவிடும்.

அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலும்
அடியேனை அஞ்சலெனவரவேணும்
அறிவாகமும் பெருக, இடரானதுந் தொலைய
அருள் ஞான இன்பமது புரிவாயே.

திருப்புகழ்

ஏச்சிரா வண்ணமெனை ஏற்கும் திருப்பாச்சில்
ஆச்சிரா மத்தாய் அடிகாட்டி ஆளாயோ

ஸமர்த்த குரு ராமதாஸ்

(தி. ந. கோபால சர்மா)

எங்கெந்த சமயத்தில் தர்மம் குறைந்து அதர்மம் மேலிடுகிறதோ அவ்வப்பொழுது தர்மத்தை நிலை நிறுத்த நான் உலகில் அவதரிக்கிறேன் என்று கண்ணபிரான் கீதையில் கூறியுள்ளபடி, நமது பாரத நாட்டில் அந்தந்த சமயத்தில் பல மகான்கள் தோன்றி இந்து தர்மத்தை வளம் பெறச் செய்தனர். அம்மகான்களில் ஒருவர் ஸமர்த்த ராமதாஸர். இவருடைய சரித்திரம் பல விசேஷ நிகழ்ச்சிகளுடன் கூடியது.

பதினேழாம் நூற்றுண்டின் மத்தியில் பாரததேசம் மொகலாயர்களின் ஆளுகைக்குட்பட்டு இந்து தர்மம் நசித்து வந்தது. கோவில்கள் மசூதிகளாயின. இந்துக்கள் மகம்மதியர்களாக்கப்பட்டனர். அந்தச் சமயத்தில் பக்த துகாராம், ஏகநாதர், ஸமர்த்த ராமதாஸர் போன்ற பெரியோர் தோன்றி தர்மத்தை நிலை நிறுத்தினர்கள். அதில் ஸமர்த்தர் முக்யமானவர்.

மஹாராஷ்டிரத்தில் சூர்யாஜி பந்த் என்பவருக்கும் ரேணுகா பாய் அம்மையாருக்கும், ஸ்ரீ சூர்ய நாராயணர் அருளால் தனுர் மாதத்தில் சுக்ல த்ரயோதசியில் ஒரு புத்திரப் பேறு உண்டானது. அம்மகவிற்கு கங்காதரன் எனப் பெயர். இவருடைய 9ஆம் வயதில் ஆஞ்சனேயர் அம்சத்தினுல் ஒரு சகோதரன் பிறந்தான். அப் புத்திரனுக்கு நாராயணன் என்று சூர்யாஜி பெயரிட்டார். இப்புத்திரனே பிற்காலத்தில் ஸமர்த்த ராமதாஸர் என்று புகழ் பெற்ருர்.

ஐந்து வயதாயிருக்கும் பொழுது உபநயனம் செய்வித்தார். சிறுவயதில் மிகவும் சுட்டியானவர். இளமையிலிருந்தே விளையாட்டு படிப்பு இவற்றோடு, நாள்தோறும் தவருமல் 2000 சூர்ய நமஸ்காரங்கள் செய்யத் தவருர்.

என்ன தவம் செய்தாய்நீ ஏழையெனத் தள்ளாது
மின்னுகின்ற வாள்போக்கி மேலவ! நீ ஏலாயோ

எட்டாம் வயதில் ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமியை மகிழச் செய்து ஸ்ரீ ராமபிரானுடைய தரிசனமும் அருளும் பெற்றார். ஸ்ரீ ராமபிரானே இவருக்கு தீக்ஷை அளித்து ராமதாஸர் என்று திவ்ய நாமத்தையும் அளித்தார். பன்னிரண்டாம் வயதில் இவருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. மணவறையில் விவாக சடங்குகள் நடக்கும் பொருட்டு சுபலக்ன ஸாவதான என்று திரையைப் பிடித்து எல்லோரும் உரக்க கூறும் நேரத்தில், மணமகனை ராமதாஸர் அங்கிருந்து மறைந்து விட்டார். நேராக கோதாவரி நதியை நீந்திக் கடந்து நாஸிக் பஞ்சவடியை அடைந்தார். பஞ்சவடியில் மீண்டும் ராமபிரானுடைய தரிசனம் கிடைத்தது. அத்தருணத்தில் கருணாஷ்டகம் வாயிலாக மிகவும் நெஞ்சை யுருக்கும் பாணியில் ராமச்சந்திரப் பிரபுவை ஸ்தோத்திரம் செய்தார். பிறகு சமீபத்திலுள்ள டாங்கலி கிராமம் சென்று கோதா-நந்தினி சங்கமத்தில் ஒரு குகையில் வசிக்க ஆரம்பித்தார். மூன்று வருஷங்கள் தியானத்திலும், ராமாயணம், வேதங்கள், உபநிஷதம் முதலிய நூல்களைப் படிப்பதிலும் கழிந்தன.

ஒரு சமயம் சங்கமத்தில் பிரம்ம யக்ஞம் செய்யும் சமயத்தில் ஒரு விதவை ஸ்திரீ ராமதாஸரை நமஸ்கரித்தாள். 'புத்திரர்களைப் பெற்று செளபாக்யவதியாக இருப்பாய்' என ஆசீர்வாதித்தார். திடுக்கிட்ட விதவை 'இந்த ஜன்மத்திலா—மறு ஜன்மத்திலா—அடுத்ததிலா எனக் கேட்டாள்'.

விஷயம் என்ன வென்றால்—அவள் அப்பொழுதுதான் தன் கணவரோடு உடன் கட்டையேற சென்று கொண்டிருந்தாள். ஏறுமுன் எவரேனும் மஹா புருஷரை வணங்க வந்திருந்தாள். விஷயமறிந்த ராமதாஸர் அவள் கணவன் சடலத்தைக் கொண்டு வரச் செய்து ராமநாமத்தை ஜபித்துத் தீர்த்தம் தெளித்தார். என்ன ஆச்சரியம்! அச்சயம் 'ராம

சிறந்த பிறப்பிருந்தும் செம்மைநெறி யில்லேன்
நிறந்தகடம் பந்துறையாய் என்மனத்து நில்லாயோ

ராம' என்று உச்சரித்துக் கொண்டே உயிர் பெற்றெழுந்தான். அவன் பெயர் கிரிதர பந்த். அந்த ஸதியின் பெயர் அன்னபூர்ணா பாய். மஹானின் வாக்கு எங்கேனும் பொய்த்ததுண்டா? அத் தம்பதிகளுக்குப் பத்துப் புதல்வர்கள் உண்டானார்கள். அவர்களில் மூத்தவனை ராமதாஸருக்கே அர்ப்பித்தனர். அவனே 'உத்தவ கோஸாவி' எனப் புகழப் பெற்றவன். அந்த வம்சத்தவர் இப்பொழுதும் அங்கே இருந்து வருகின்றனர்.

நிற்க குகையில் இருக்கும் ராமதாஸரை இராமபிரான் தீர்த்த யாத்திரை செய்து வருமாறு பணித்தார். அவ்வாறே ராமதாஸர் கோகுலம், மதுரா, துவாரகை, பத்ரீநாத், கேதார் நாத் முதலிய புண்ய க்ஷேத்திரங்களையும், தியான மூர்த்தியாய் இருக்கும் ஸ்ரீச்வேதமாருதியையும் தரிசித்து, அவ்விடம் நான்கு மாதங்கள் தங்கினார். ஸ்ரீச்வேத மாருதி ஸ்வாமி இவருக்குத் தொப்பி, இடுப்பில் அணியப்படும் மேகலை எனும் ஆபரணம், மரவுரி வஸ்திரம், ஜபமாலை, பாதுகை முதலியவற்றை பிரஸாதமாக அளித்தார். அங்கிருந்து புறப்பட்டு கிழக்குக் கரையோரமாக உள்ள தீர்த்தங்களில் நீராடி, ராமேச்வரம் ஸேதுபந்தனம் இலங்கை முதலியவற்றைத் தரிசித்துக் கொண்டே பஞ்சவடிக்குத் திரும்பி வந்தார்.

தீர்த்தயாத்ரை முடித்த பின் ஒரு நாள் கோதாவரிக் கரையில் அதியத்புதமாகப் பாடிக் கொண்டிருந்தார். குரலிலிருந்து இவரை அடையாளம் கண்டு கொண்ட ஜனங்கள், இவரிடம், 'ஸ்வாமி நீங்களோ நிஷ்கவலையாகப் பாடிக் கொண்டிருக்கிறீர். அங்கு உமது தாயாரோவெனில், உங்களைப் பிரிந்த ஏக்கத்தால் அழுதழுது கண்பார்வை யிழந்து மிகவும் பலஹீனமடைந் துள்ளார் எனக்கூறினர். அதைச் செவியுற்ற ராமதாஸர், உடனே தாயாரைக் காண ஜாம்ப கிராமத்திற்கு விரைந்தார்.

கருத்தில் பராய்த்துறையைக் கண்டுகரம் கூப்ப
இருத்து நினதடியை என்னுளத்தில் எந்தாயோ

வீட்டை யடைந்த ராமதாஸர் வாயிலில் நின்று, "ஜய ஜய ரகுவீர ஸமர்த்த" என்று குரல் கொடுத்தார். அதைக் கேட்ட ராமதாஸருடைய அண்ணியார் பிக்ஷை எடுத்து வந்தார். அதைக் கண்ட ராமதாஸர், "நான் பிக்ஷைவாங்கும் பைராகியல்ல" வெனக்கூறினர். அதற்குள் அவரைக் குரல் கொண்டு அடையாளம் கண்ட அன்னையார், யார் என் மகன் நாராயணனு எனக் கேட்டார். ஓடிச்சென்று ராமதாஸர் அன்னையின் பாதங்களில் சிரம் வைத்தார். இருபத்து நான்கு வருடங்களுக்குப் பிறகு தாயும் தநயனும் ஒன்று சேர்ந்தனர். ராமதாஸர் மெல்லத் தாயின் கண்களைத் தடவிக் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! தாயின் கண்பார்வை மீண்டது. தாயாருக்கு கபிலகீதா சொல்லி—அவருடைய ஆக்ஞை பெற்று கோதாவரி தீரத்தை யடைந்தார். அங்கிருந்து பல தீர்த்தங்களின் வழியாக மீண்டும் பஞ்சவடியை அடைந்து ராமபிரானையும் தரிசித்து, அங்கிருந்து டாபலி கிராமத்தை யடைந்து உத்தவரை சந்தித்தார். இம்முறை தான் சென்ற தீர்த்தங்களிலெல்லாம் தனது மடத்தை ஸ்தாபனம் செய்து, ஒவ்வொரு மடத்திலும் ஒரு சிஷ்யரை நியமித்து வந்தார்.

இவ்விதம் தவத்தில் பன்னிராண்டுகளும், தீர்த்த யாத்திரையில் பன்னிராண்டுகளும் கழிந்தன. நூற்றி எழுபதாம் வருடம் வைகாசி மாதம் இராமபிரானல் கிருஷ்ணா நதியை அடையும்படி ஆக்ஞை யிடப்பட்டார். அங்கு மாஹுலி கிராமத்தில் தங்கிய ராமதாஸரை பல ஸாது புருஷர்கள் வந்து சந்தித்தனர். வரகிராமத்தின் ஜயராமஸ்வாமி, நிகடியின் ரங்கனாத ஸ்வாமி, ப்ரஹ்ம நாலத்தின் ஆனந்த மூர்த்தி ஸ்வாமி, பாகாநகரின் கேசவஸ்வாமி, ராமதாஸர் ஆகிய ஐவரும் பக்த பஞ்சாயத்து கூடி வந்தனர். இங்கு தான் ஸ்ரீ துகாராமும் சிஞ்சவடத்தின் தேவரும் தாஸரைச் சந்திக்க வந்தனர். பிறகு ராமதாஸர் கிருஷ்ணாவும்

கோபனு நதியும் சேரும் இடமான ப்ரீதி சங்கமத்தினின்று 6 மைல் தூரத்தில் ஒரு குகையில் வசிக்க ஆரம்பித்தார். ஷாபூரில் பிரதாம மாருதி மந்திரத்தை ஸ்தாபித்தார். அங்கிருந்து சாபலத்தை அடைந்தார். அதன் ஸீபேதார் பாராஜி பந்த் தாஸரிடம் தீக்ஷை பெற்ருர். ஸீபேதாரின் சகோதரி ரகுமா பாய், அம்பாஜி, தத்தாத்ரேயன் என்ற தன் இரு குமாரர்களோடு ராமதாஸரின் சிஷ்யையானுர்.

1702ல் தாஸர் ராமநவமி உத்ஸவம் கொண்டாடத் தொடங்கினுர். முதல் உத்ஸவம் மைசூரில் மிகவும் ஆடம்பரமாக நடந்தது. அதன் பிறகு பல்வேறு இடங்களில் சமர்த்த ஸம்பிரதாயப்படி நவசைதன்யத்துடன் ஸ்ரீ ராம ஜயந்தி கொண்டாடப் பெற்றது.

இந்நாட்களில் தான் மஹாராஷ்டிரத்தில் ஸ்ரீ சிவாஜி ஹிந்து தர்ம ஸ்தாபன காரியத்தில் ஈடு பட்டார். ராமதாஸரின் ஸத்கீர்த்தியைக் கேள்விப்பட்டு சிவாஜியின் மனம் விரைந்தோடி ராமதாஸரைத் தன் குருவாக வரித்து விட்டது. 1706ல் சாபலத்தின் அருகில் சிங்கணவாடி என்னுமிடத்தில் சிவாஜியை சிஷ்யராக ஏற்று, அவருக்கு இராம பிரானின் திரயோதசாக்ஷர மந்திரத்தை உபதேசித்தார். 1707 லிருந்து பரலியில் வசிக்க ஆரம்பித்தார். அவ்விடம் ஸெஜ்ஜனகட் என்றழைக்கப் பட்டது. சிவாஜி மன்னரும் இவரை அடிக்கடி வந்து தரிசித்தார்.

ஒரு சமயம் சிவாஜி மன்னர் ஸதாராவில் தங்கியிருந்த போது, ராமதாஸர் பிக்ஷை எடுத்துக் கொண்டே மாளிகை வாயிலை யடைந்தார். மன்னர் சாஷ்டாங்கமாக வணங்கி, "இன்று வரை நான் சம்பாதித்த செல்வ மனைத்தையும் ஸமர்த்தருக்கு அர்ப்பணம் செய்கிறேன்" என்று எழுதப் பட்ட ஒரு லிகிதத்தை தாஸருடைய பையில் போட்டார். மறு நாள் சிவாஜி மன்னரும் ஒரு பையை எடுத்துக் கொண்டு ராமதாஸருடன் பிக்ஷை எடுக்கக் கிளம்பி

ஊக்கமிலேன், நின்னருளில் ஊன்றியிலேன் ஒஓயான், மூக்கீச் சரமுறைவாய் முன்வந் தருளுதியோ

விட்டார். அதைக் கண்ட ராமதாஸர், "ராஜ்யத்தை ஆளுவதே உனது கடமை என்று அறிவுறுத்த, மீண்டும் ராஜ்யபாரத்தை ஏற்றுர்.

ஒரு சமயம் ராமதாஸர் தஞ்சை வந்திருந்தார். அத் தருணம் ஒரு குருட்டு சிற்பிக்குக் கண்பார்வை அளித்து, அவனை ஸீதாதேவி, லக்ஷ்மணர், ஆஞ்சநேயரோடு ஸ்ரீ ராம பிரானின் விக்ரகங்களைச் செய்யுமாறு பணித்தார். இவ்விக் ரங்கள் 1938 பங்குனி கிருத்திகை யன்று ஜைன கட்டத் திற்கு வந்து சேர்ந்தன. அங்கே அந்நான்கு மூர்த்திகளும் தாஸரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, பூஜை அர்ச்சனைகள் செய்யப் பட்டு வந்தன.

பின்னர் மாசி கிருத்திகை யன்று மஹாபிசானத்திற்கு எல்லோரிடம் விடை பெற்றுக் கிளம்பினர். அதைக் கண்ட உத்வார் ஆக்கா முதலிய சிஷ்யர் வருத்த மடைந்தனர். அதைக் கண்ட ராமதாஸர், இதுதான் இவ்வளவு நாட்கள் நீங்கள் பரமாத்மாவைப் பற்றி கேள்விப் பட்டதின் பலனா எனக் கேட்டார். அதைக் கேட்ட சிஷ்யர்கள், "ஸ்வாமி! நீங்கள் எங்கும் நிறைந்தவர்தான். ஆனால் தங்கள் சமூகத்திலிருந்து நேரில் சம்பாஷிக்கும் பாக்கியம் இனி கிடைக்காதே என்று தான் வருந்துகிறோம் என்றனர். இதைக்கேட்ட ராமதாஸர் அவர்களை ஆசீர்வதித்து, 'ஆத்மாராமம்' 'தாஸபோதம்' எனும் இவ்விரண்டு நூல்களை யும் கற்றறிந்து, அதன்படி நடக்கும் பக்தர்கள் ஒரு போதும் துக்கத்தை அனுபவியார் என்று கூறி, 21 முறை ஹர ஹர என்று உச்சரித்து ராம நாம ஸ்மரணை செய்ய ஆரம் பித்தவுடன், அவருடைய முகத்திலிருந்து ஒரு திவ்ய ஜோதி கிளம்பி, ஸ்ரீ ராமச் சந்திர மூர்த்தியோடு ஐக்யமா யிற்று.

ஸமர்த்த ராமதாஸர் இயற்றிய நூல்கள் பின்வரு மாறு "தாஸபோதம், மனோபோதம் கருணாஷ்டகம்,

---

தாயாய்ச் சிராப்பள்ளி தங்குமுனை என்றும்மே
வாயால் வழுத்தும் வரத்தை அளியாயே

பழைய தாஸபோதம், ஆத்மாராமம், ராமாயணம், ஓவி பதினன்கு சதகம், ஷட்ரிபு, பஞ்சீகரண யோகம், சதுர்த்த மானம், மான பஞ்சகம், பஞ்சமானம், ஸ்புடப்ரகரணம்.

என்தனி நெஞ்சம் யாருக்கு இருப்பிடம்!

(வா. ராமலிங்கம் பிள்ளை.)

"யான் எனது என்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்"

என்பது திருவள்ளுவர் வாக்கு.

இதனுல் தன்னுடல்பற்றி "யான்" என்ற பற்றும், தன் தேவைக்கு என வேண்டப்படும் பிற பொருள்களை "எனது" என்ற பற்றும் முற்றக் கடந்து ஒதுக்கியவன் வானோர்க்கு மேற்பட்ட தன்மையை அடைவான் எனவும் குறிக்கப் படுகின்றது.

எனினும் நம் மூதாதையர்களின் அருட்பெருக்கான திருமுறைகளில் இறைவனை நோக்கிக் கரைந்துருகும் கழிபேருவகையில் அன்னுர் எடுத்தாண்டதிறம், "என் நெஞ்சம்" "எனது உள்ளம்" "என் மனம்" "என் சிந்தை" எனப் பலபடவும், "நானேயோ தவம் செய் தேன்" "யானே தவமுடையேன்" எனும் உரிய உரை களில், "யான் என்ற பதத்தை எடுத்தாண்ட தன்மையும் காண்கிறோம். அந்நெறி பற்றி என் நெஞ்சம் எனக் குறித் துணர்ந்து, நெஞ்சத்து இடம் பெற்றது, பெறுவது, பெற வேண்டுவது எது என சிந்தித்தல் அவசியம்.

நவை சேர் உடலில் நெஞ்சத்தொடு பொருந்தி உறை வது தன் வயமாய் நம்மை இழுத்தாட்டும் தன்மை கொண்ட வலிமை மிக்க ஐம்புலன் ஆகும்.

இந்நிலை ஆன்மா வினைக் கேற்ப இறைவனுல் உடலில் புகுத்தப் பெறும்பொழுதே உடன் பொருத்தப் பெற்ற

வெறும்பிலுக்கால் நெஞ்சம் வேதனையை எய்தாமல்
எறும்பியூர் வாழ்சிவனே என்னுளத்தில் மன்னுதியோ

தாம். ஐம்புலன்களின் வலிமைமிக்க தன்மையும், அதனை வெல்வதே இறையருள் பெற்று ஈடேற்றப் பெற ஏற்ற நிலையா மென்பதும் அருள் வள்ளல்களால் நமக்கு அறிவுறுத்தப் பெற்றுள்ளன.

"காணிலார் கருத்தில் வாரார் திருத்தலார் பொருத்தலாகார்
ஏணிலார் இறப்புமில்லார் பிறப்பிலார் துறக்கலாகார்
நாணிலார் ஐவரோடும் இட்டெனை விரவி வைத்தார்
ஆணலார் பெண்ணுமல்லார் அதிகைவீ ரட்டனாரே"
"புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடைப் புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளைய வொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணான் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினை லெய்யலாமே"
"மெய்யுளே விளக்கை யோற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றே னுகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களோ வலியர் சாலச்
செய்வதொன் றறிய கில்லேன் திருப்புக லூரனாரே"
"அஞ்சப் புலனிவற்றா லாட்ட ஆட்டுண் டருநோய்க் கிடமாய
வுடலின் தன்மை]
தஞ்ச மெனக்கருதித் தாழேல் நெஞ்சே"
என்பன திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கு.

இத்தகைய வலிமை மிக்க ஐம்புலக் கொடுமையை மெல்ல மெல்ல அவனருளை உன்னி உணரும் பண்பால் வென்று நிற்றலே வள்ளல் திருவடிப் பேறு வாய்க்கும் நலந்தருவதாகும்.

இதனை,

"பஞ்சபூத வலையிற் படுவதற், கஞ்சினானு மாமாத்தூ ரழகனை
நெஞ்சினால் நினைந்தேன் நினைவெய்தலும்,
வஞ்ச ஆறுகள் வற்றின காணமினே"
"முன்னெஞ்சமின்றி மூர்க்கராய்ச் சாகின்றார்,
தன்னெஞ்சம் தமக்குத் தாமி லாதவர்,
வன்னெஞ்சம் அது நீக்குதல் வல்லிரேல்
என்னெஞ்சி லீசனைக் கண்டதென் னுள்ளமே"
"இமையா முக்கண்ணர், என்னெஞ்சத் துள்ளார்

எடுங்களத்தில் இப்பிணத்தை என்னுமுனே எந்தாய்
நெடுங்களத்துள் ஈர்த்து நிலைபேறு செய்வாயோ

தலையாரு மறி வொண்ணுத் தகைமையார்,
என அப்பர் சுவாமிகளும்

உய்த்தாடித் திரியாதே உள்ளமே வுழிகண்டாய்,
யூன்கணோட்டம்]
எத்தாலுங் குறைவில்லை என்பர்காண் நெஞ்சமே நம்மை
நாளும்]
பைத்தாடு மரவினன் படர்சடையன் பரஞ்சோதி பாவம்
தீர்க்கும்]
பித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத் தெம்பெருமானை பெற்று
மன்றே.]

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,

'இடக்கும் கருமுருட் டேனப்பின் கானகத்தே, நடக்குந் திருவடி
என்றலைமேல் நட்டமையால், கடக்குந் திறலைவர் கண்டகர்
தம் வல்லாட்டை]
அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே"
"அனைத்துலகும் ஆயனின்னை ஐம்புலன்கள் காணகிலா"

என ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளும் அருளிப் போந்தமையின், இம்மாய இருளறுத்து மெய்ம்மையில் வீடுபெற அவனருட் பற்றினால், பரவிப் பணிந்து தொடக்குண்ட கட்டை அறுத்துத் தூய்மை உள்ளம் பெற்று, அவ்வுள்ளத்தையும் விமலன் உறைதற்கிடமாக்கி நிற்றலேயாம் என்பது தெளிவு. அன்றிப் பொறிவழி யுழன்றால், மெய்ம்மை வீட்டினை மேவுதல் கூடாதாகும். இது குறித்தே ஓதாதுணர்ந்த மூதாட்டி

மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம் என்றருளினனர். மற்று அருள்நலம் தோய்ந்த பெருமக்களும்,
சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்,
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

எனவும்,

மனமொழிந்து காம மயக்கொழிந்து மாறாச்
சினமொழிந்து வாதனையுந் தேய்ந்தால்—இனிய
குருக்களாய் வந்தடிமை கொண்டு வீடுய்க்கும்
திருக்களா வாழுஞ் சிவம்.

உருக்காட்டித் தண்ணளிசெய் துய்தி தனையளிக்கத்
திருக்காட்டுப் பள்ளிதுரை சேரவந்து நில்லாதோ

"ஊனேக்கும் இன்பம் வேண்டி யுழலாதே
வானேக்கும் வழி யாவது நின்மினே
தானேக்குந் தன்னடியார் நாவினில்
தேனேக்குந் திரு வெண்காடடை நெஞ்சே.
"வஞ்ச மனத்தவர்கள் காண வொண்ணு மணிகண்டன்"

எனவும் நமக்கு எடுத்துரைத்ததோ டமையாது, தாங்கள் அநுபவித்த உண்மை அருள் நிலையையும் நம்மனோர் அறியுமாறு சில பல கூறியுள்ளமையும் குறித்துணரத் தக்கதாம்:—அவை வருமாறு.

"நாடி நாராயணன் நான்முகன் என்றிவர்,
தேடியுந் திரிந்துங் காண வல்லரோ
மாடமாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே"
"நிலைமை சொல்லு நெஞ்சே தவமென்செய்தாய்
கலைகள் ஆய வல்லன் கயிலாயநன்
மலையன் மாமயிலாடு துறையன்நம்
தலையின் மேலும்ம னத்துளுந் தங்கவே"
"எந்தமாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை ஆய பராபரன்"
"நெஞ்சமென்பதோர் நீள்கயந் தன்னுள்ளே
வஞ்சமென்பதோர் வான்சுழிப் பட்டுநான்,
துஞ்சும்போது நின்னுமத் திருவெழுத்
'தஞ்சு'ந் தோன்ற அருளுமை யாறரே"

என்பனவற்ருல் மனத்தின் வலிமாண்டு, நெஞ்சத்தின் வஞ்சநிலை மாறி, அஞ்செழுத்தில் நெஞ்சழுத்திப் பயின்ற பண்பால், தஞ்சமாவது தாணுவின் திருக்கழல் என்ற திண்மையாம் உண்மை நெஞ்சில் பொருந்திய போது, எம்பிரான் அஞ்சல்அஞ்சேல் என்று அருள்புரிந்து, அவ்விடமே தனக்குகந்த உறைவிடமாக வந்து நிலவுவன் என்பதும் காணத்தகுவதாம். இறைவன் திருப்புகழே நினைத்தலும், பேசலும், இடையருது சிந்தித்தலும் மக்கட்கு ஏற்றம் தருவதாம்.

அருணகிரியும் ஆற்றுப் படையும்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை)

ஆற்றுப் படை என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. ஆற்றுப் படுத்துவது (வழி காட்டுவது) என்பது அதன் பொருள். ஒரு பொருளை விரும்பி நின்ற ஒருவனை, அப்பொருளைப் பெற்றான் ஒருவன், நீ இன்ன இடத்திற் சென்றால் அப்பொருளை நீயும் பெறலாம் என்று இவனுக்கு வழி காட்டுவது ஆற்றுப் படையாகும்.

வீடு பெற்றான் ஒருவன் வீடு பெற விரும்பிய ஒருவனை முருகன் இடத்தே ஆற்றுப் படுத்தக் கூறின வகையிற் பாடப்பட்ட நூல் 'திரு முருகாற்றுப்படை'. ஆற்றுப் படைகளுள் மிகப் பழையதாதலின், முதன்மையாதலின் 'பாவுள் முன்னுற வந்து நிற்கும் முருகாற்றுப்படை" எனப்பட்டது. இந்நூலைப் பாடினவர் சங்கப் புலவர்களுள் தலைமை பூண்டிருந்த நக்கீர தேவர்.

இத்திருமுருகாற்றுப் படையின் பெருமை அளவிடற்கு அரியது. அருணகிரியார் இதனை 'வேத மொழி' எனப் போற்றி யுள்ளார். வேத கீத இசை கூட்டி இதைப் பாடவேண்டும் என்கின்றார்.

"கீத இசைகூட்டி வேதமொழி சூட்டு
கீரர் இயல் கேட்ட க்ருபைவேளே"
"அருமறை கரைகூட்டி உரைசெய்
தமிழ் பாட்டு"
"கீதம் புகலிசை நாதங் கனிவுறு
கீரன்தமிழிசை மொழி"
"தமிழ்ப் பலகை யிருக்குமொரு
கவிப் புலவன் இசை"

(திருப்புகழ் 1278, 1092, 1040. வேல் வகுப்பு.)

என்றெல்லாம் புகழ்ந்துள்ளார்; எனவே, வேதம் கூறுவது போன்ற இசையுடனும், திருத்திய உச்சரிப்புடனும் திரு

பூந்துருத்தி வாழ்வாய் பொல்லாப் புலால்துருத்தி
மாந்தியிரு என்றல் மரபோ அருளோனே

முருகாற்றுப்படையை ஓதவேண்டும் என்பது பெறப்படு கின்றது.

மேலும், திருமுருகாற்றுப்படைக்கு "உலகம் உவப்ப" என்ற அடி எடுத்துக் கொடுத்தவர் முருகவேளே என்பதும், 'உலக முவப்ப என்றுன் அருளால் அளிக்குகந்த பெரி யோனே' என வரும் அருணகிரியார் திருவாக்கால் தெரி கின்றது. (திருப்புகழ் 203)

பின்னும் திருமுருகாற்றுப்படை எவ்வளவு இன் பத்தை முருகவேளுக்குத் தந்தது என்பதை அருண கிரியார்—'முருகா! உனக்கு நக்கீரர் பாடிய ஆற்றுப்படை தேவசேனையின் கலவி இன்பத்தினும் அதிக இனிமை யைத் தந்தது—

"கைம்மா மயிலை செவ்வி நக்கீரர் சொல் தித்தித்ததே" எனக் கந்தரந்தாதியில் (51) சிறப்பித்துள்ளார். இவ்வுவ மையைக் கண்ட சிவப்ரகாச சுவாமிகள்—"கரும்பையும், அமுதையும், தேனையும் கசப்பு என்று சொல்லும்படி அத் துணை இனிப்பு மிக்க வள்ளியின் இனிமை கொண்ட சொல்லைக் கேட்பதையும் நிறுத்திவிட்டு, நக்கீரரது தமிழை முருகன் செவி தாழ்த்திக் கேட்டான்; களிப்புற்றுன் எனும் கருத்தை—

'வள்ளி கன்னலும் அமுதும் தேனும் கைக்கும்
இன் தீஞ்சொல் மாற்றித், தன்னிகர் புலவன் கூறும்
தமிழ் செவி தாழ்த்துக் கேளா, அங்கிலை மனங்
களிப்புற் றறுமுகம் படைத்த கோமான்'

எனப் பாடித் திருமுருகாற்றுப் படையைச் சிறப்பித் துள்ளார். வள்ளியின் பேச்சின் இனிமையை 'இந்தளாம் ருத வசனம்', 'ரஞ்சிதாம்ருத வசனம்', 'கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லி' என அருணகிரியாரும் மிகப் பாராட்டி யிருக்கின்றார். அத்தகைய இனிமையினும் திரு முருகாற்றுப்படை முருகவேளுக்கு அதிகமாக இனித்த தென்றால், இத்திருமுருகாற்றுப் படையின் பெருமையை முருகவேள் ஒருவரே அறிவரன்றி பிறர் அறிய இயலாது. நன்று: இது நிற்க—

அண்டியூர் கின்றமதி அன்பரெலாம் வாழ்கின்றார்
கண்டியூ ராய்என்னைக் கடைக்கணித்துக் காவாயோ

இந்நிலையில் நமக்கு ஒரு ஐயம் எழலாம். அருணகிரி யார் இங்ஙனம் சிறப்பித்த இந் நக்கீரரோ சிவபிரானையும் முருகவேளையும் காரணார்த்தமாகப் பாடினவர். சிவபிரானோடு வாது செய்து அவருக்குத் தம்மீது எழுந்த கோபத்தைத் தணிக்கவேண்டிக் 'கோபப் பிரசாதம்', 'கயிலைபாதி காளத்தி பாதி' பாடினவர்: பூதத்தினின்றும் விடுபட வேண்டித் திருமுருகாற்றுப்படை பாடி முருகவேளை மகிழ் வித்தவர். அருணகிரியாரோ தம்மை ஆட்கொண்ட முருக வேள் ஒருவரையே பாடி அழிவிலா இன்பம் பெற்றவர். அங்ஙனம் இருக்க அருணகிரியார் ஏன் ஒரு ஆற்றுப்படை பாடவில்லை? அவர் ஏன் நம்மை திருமுருகனிடத்தில் ஆற்றுப்படுத்தவில்லை? அவர் ஏன் ஒரு திருமுருகாற்றுப் படை பாடவில்லை என்னும் வினா நிகழ்கின்றது. பதினாயிரம் சந்தப் பாக்களையும், கந்தப் பெருமானது அலங்காரத்தையும், தாம் அவரால் அடைந்த அநுபூதிச் செல்வத்தையும் வாயாரப் பாடின அப்பெரியார், நம்மை முருகனிடத்தே ஆற்றுப்படுத்தாது விடுவாரா? அவர் கருணை வள்ளல் ஆயிற்றே எனத் தேர்ந்து அவர் பாடல்களை ஆராயப் புகின், அவர் பாடியருளிய ஆற்றுப்படை திருமுருகாற்றுப் படை நம் கண் முன் ஒளி வீசி நிற்கின்றது. அது எது? அதுவே அவர் திருவகுப்புக்களில் தங்துள்ள "கடைக்கணியல் வகுப்பு". நக்கீரர், வீடுபெற விரும்பினான் ஒருவனை நோக்கி, "செவ்வேற் சேயின் சேவடி பெற விரும்பினால் வழி கூறுகின்றேன் என்றார். அருணகிரியாரோ உலகில் உள்ள யாவரையும் 'வாருமே வாருமே' என விளித்து,நீங்கள் முருகவேளின் மயிலையும்அவர் கடைக்கண் இயலையும் நினைந்திருந்தாற் போதும். அவர் உங்களை ஏழுலகையும் ஆள வைப்பார்; இந்த்ர போகம் தருவார்; குபேர செல்வம் தருவார்; தமிழ் ஞானத்தைத் தருவார்; முத்தி வழியைக் காட்டுவார்; போரில் வெற்றி தருவார்; புட்பக விமானத்தையும், ஐராவதத்தையும் ஏறிச் செல்வதற்குத் தருவார். நக்கீரர் 'உலகத்தொடு நீயாகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசில்' என்றாரே அந்தப் பரிசிலையும் தருவார். யமனையும்

மாற்றுத் துறையறியேன் மாழ்கிமதி நோகாமல்
சோற்றுத்துறையுறைவாய்ஓர்மொழிமுன்சொல்லாயோ

வெல்லும் ஆற்றலைத் தருவார்; அதனுடன் பிறப்பையே ஒழித்துவிடுவார்'' என்றெல்லாம் இவ்வகுப்பில் எடுத்து ஓதி உள்ளார் என்றால், அருணகிரியாரின் கருணைக்கு ஒரு எல்லை உண்டா? அதனாலன்றோ 'கருணைக்கு அருணகிரி' என்னும் பாடல் எழுந்தது. திருமுருகாற்றுப்படை என்னும் சொல் சிறப்பாக நக்கீரர் அருளிய நூலைக் குறிக்கும் எனினும், அச் சொல்லின் பொதுப் பொருளின்படி அருணகிரியாரும் ஒரு திருமுருகாற்றுப்படை பாடியுள்ளார் என்பது இப்போது நன்கு புலப்படுகின்றதன்றோ!

திருவாவினன்குடித்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

சுருதிமுடி மோனம்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுதல்
—ஒருவாழ்வே!

துரியநிலை யேகண்ட முத்தரித யாகமலம்
அதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாஇன்ப பத்மபத மேஅடைய—உணராதே
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதஅறி யாவஞ்ச கக்கபட மூடியுழல் வினைதானே
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜம்
எனஉழலும் மாயம்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளஉன தருள்
—தாராய்;
ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயிர்

**தீதிலவாம் நன்னெறியைத் தேரஅருள் செய்கின்ற
வேதிகுடி வேதியனென் வீண்பிறவி வீழ்த்தானே**

உடலுணர்வ தாயெங்கும் உற்பனம தாகஅமர்
—உளவோனே!
உததரிச மாயின்ப புத்தமிர்த போகசுகம்
உதவுமம லாநந்த சத்திகர மேவுணர
உருபிரண வாமந்த்ர கர்த்தவ்ய மாகவரு—குருநாதா!
பருகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்டம் ஒக்கநடம் ஆடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயில் ஏறுமொரு
—திறலோனே!
பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாஒன்று வற்கரமும் ஆகிவளர்
பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாஅமரர்-பெருமாளே!

(ஒருநியம.........உளவோனே.)

(பதவுரை.) ஒரு நியமமே விண்ட சட்சமய வேத அடி முடி நடுவுமாய் - ஒப்பற்ற விதி முறைகளையே விளம்புகின்ற ஆறு சமயங்களை (தன் அகத்திற் கொண்ட) வேதங்களின் ஆரம்பத்திலும், நடுவிலும், இறுதியிலும் அமைந்து;

அண்ட முட்டை வெளிஆகி - (அழகிய) முட்டை வடிவமான அண்டங்களிலும், (அதற்கு அப்பால ஆன) வெளியிலும் நிறைந்து;

உயிர் உடல் உணர்வது ஆய் எங்கும் உற்பனமது ஆக அமர் உளவோனே - (உயிர்க்குள்) உயிராகியும், (அவ்வுயிர்கள் தங்கிய) உடலாகியும், (உயிரின்) உணர்வாகியும், (நீக்கமற) எங்கும் நிறைவாக அமர்ந்த அதிநுட்ப அரும் பொருளே!

(உததரிச...........குருநாதா.)

உத தரிசம் ஆம் இன்ப புத்தமிர்த போக சுகம் உதவும் அமல ஆனந்த - உயரிய நீரின் ஊற்றுப்போல், வளரும் இன்பத்தை வழங்கும் புதிய அமிர்த சிவபோகப் பெரு வாழ்வை உதவுகின்ற, (இயல்பாகவே) களங்கம் இல்லாத இன்ப வடிவ எம்மானே!

சத்தி கர - ஞான சக்தியான வேல் படையை (எழிலுடைய திருக்கரத்தில்) ஏந்தியவனே!

மேவு உணர் அ உரு பிரணவ மந்த்ர கர்த்தவ்யம் ஆக வரு குரு நாதா - (உயர்வு பெற) விரும்பி உணர்கின்ற அநாதியான ஓங்கார மந்திர முதலாளியாக எழுந்தருளும் தலைமை ஆசார்யா!

திருத்தென் குடித்திட்டைத் தெய்வமே! நின்றுள்
நிருத்தம் எனதகத்தில் நீடல் உணர்ந்திலனே

(பருதி..........திறலோனே)

பருதி கதிரே கொஞ்சு நல் சரண நூபுரமது அசைய - சூரிய கிரணம்போல் (ஒளி பரப்பி,) இனிது ஒலிக்கும் சிறந்த அடைக்கல நிலயமாய் (க்கிளர்ந்த) திருவடிகளில் இருக்கும் கிண்கிணி அசைய;

நிறை பேர் அண்டம் ஒக்க நடம் ஆடு கனபத - நிறைந்த பெரிய அண்டங்கள் அனைத்தும் அசைய, திருநடம் புரியும் திருவடி களை யுடையவனே!

கெருவிதா துங்க வெற்றி மயில் ஏறும் ஒரு திறலோனே - செருக்கும் உயர்வும் ஜெயமும் கொண்ட மயில்மேல் ஏறி வரும் ஒப்பற்ற ஆற்றலை உடையவனே!

(பணியும் அடியார்.....பெருமாளே.)

பணியும் அடியார் சிந்தை மெய்ப் பொருளது ஆக நவில் சரவணபவா - (அன்போடு) வணங்கும் அடியவர், (தம்) உள்ளத் தில் மெய்ப்பொருள் என்று எண்ணி ஏத்தும் ஆறு எழுத்துப் பெயரானா!

ஒன்று வல் கரமும் ஆகி வளர் பழநி மலை மேல் நின்ற சுப்ர மணியா - ஒன்றிய வன்மையும் ஒண்மையும் ஆகி உயர்ந்த பழநி மலைமேல் எழுந்தருளிய சுப்ரமண்யா;

அமரர் பெருமாளே - தேவர் (தொழும்) பெருமையையுடைய தெய்வமே!

(சுருதிமுடி..........வாழ்வே.)

சுருதி முடி மோனம் சொல் சித் பரம - வேத முடிபான மௌன நுண்மையை(ச் சொல்லாமல்) சொல்கின்ற பேரறிவுடைய பெருமானே!

ஞான சிவ சமய வடிவாய் வந்த அத்துவிதம் ஆன பர - சிவஞானக் கோட்பாட்டில் சொருப முதலாய் வெளிப்படும் இரண் டற்ற பரம்பொருளே!

சுடர் ஒளியதாய் நின்ற நிட்கள - ஆன்ம ஒளியில் பேரொளி யாக விளக்கும் அருவத் திரு மேனியனே!

சொருப - (அருவ உருவ அருவுருவம் கடந்த) இயற்கைநிலை எம்மானே!

முதல் ஒரு வாழ்வே - வித்தாகி, ஒப்பற்ற வாழ்வில் விளைபவனே!

(துரியநிலை..........உணராதே.)

துரிய நிலையே கண்ட முத்தர் இதயா கமலம் அதனில் விளையா நின்ற - (நின்மல) துரிய நிலையிலே நின்ற (உயர்ந்த) ஜீவன் முத்தர் களின் உள்ளக் கமலத்தில் (வியஞுகி) விளைகின்ற;

கள்ளமகல் உள்ளமுளர் கண்டுதொழு கின்றமதி
புள்ளமங்கை யாய்!அடியேன் போற்ற அருளுதியோ

அற்புத சுபோத சுக சுய படிகம் ஆம் இன்ப பத்ம பதமே அடைய உணராதே - அற்புதமும், தூய தெளிவும், (இயல்பான) சுகமும், இயற்கை ஒளியுமான, இன்பம் தரும் தெய்வக் கமலத் திருவடிகளையே அடையும் உணர்வில் அழுந்தி யிராமல்;

(கருவில்.........அருள்தாராய்)

கருவில் உருவே தங்கு சுக்கில நிதான வளி பொரும - கருப் பத்தில் உருவாகத் தங்கும் வீரியம், (உயிர் என்னும்) அமைதியான பிராண வாயுவால் பூரிக்க;

அதிலே கொண்ட முக்குண விபாக நிலை - அச் சேர்க்கையால் ஆன (அமைதி, சோம்புதல், விறுவிறுப்பு எனும்) முக்குணங்களின் வேறுபட்ட நிலையை;

கருத அறியா வஞ்சகக் கபடம் மூடி - நினைத்துப் பார்க்கவே இயலாத வஞ்சமும் கபடமும் வளர்ந்து மொய்த்து;

உடல் வினைதானே கலகம் இடவே - (பிறந்த) உடலில் (விணை) வினைகள் கலகம் விளைவிக்க;

குப்பை மல வாழ்வு நிஜம் என உழலும் - (கூட்டிக் கொட் டும்) குப்பைக்கு ஒப்பான மும்மலத் தொடர்பால் விளைந்த (அழி யும்) வாழ்வை, என்றும் இருக்கும் என்று நம்பித் திரியச் செய்கின்ற;

மாயம் செனித்த குகையே உறுதி கருதும் - மயக்கம் பல தோற்றுவிக்கும் குகை போன்ற இவ்வுடலையே நிலையானது என்று நினைக்கும்;

அசுணம் ஆம் இந்த மட்டைதனை ஆள உனது அருள் தாராய் - நாய்க்கு ஒப்பாம் இத்துணை மட்டியான என்னை ஆளாக் கிக் கொள்ள, (அரிய) உனது திருவருளை அருளாயோ, (எ - று).

புறப்புறச் சமயங்கள் ஆறு; புறச் சமயங்கள் ஆறு; அகப் புறச் சமயங்கள் ஆறு; அகச் சமயங்கள் ஆறு. இந்த நால்வகைப் பட்ட ஆறு சமய மூர்த்தங்க ளாகி, அவ்வவர் பக்குவத்திற்குத் தக்கபடி அருளுகின்ற தெய்வம் ஆறுமுகம்.

"ஆறு சமயக் கடவுள் வேறு வேறின்றி, யான் ஒருவனே
அங்கங்கு இருந்து அன்பர்க்கு முத்திதரு வித்துஎன்று
அறிவித்த வதன மணியே"

என்று இதனை அறிந்து உரைப்பர் அருளுடையோர்.

இச் சமயம் உயர்ந்தது; அச் சமயம் தாழ்ந்தது என்று வாய்ப் பறை யறைதல் விபரீதம். அநுபவம் இல்லாத அவர்களை எண்ணி,

---

திருவிருந்து வாழும் திருச்சக் கரப்பள்ளிக்
குருவிருந்தே! நீயென்னைக் கொள்ளை கொள்ள எண்ணுதியோ

"ஒன்றதே பேரூர்; வழி ஆறு அதற்குஉள(து);
என்றதே போலும் இருமுச் சமயங்கள்
நன்றிது தீதிது என்றுரை மாந்தர்கள்
குன்று குரைத்தெழு நாயை ஒத்தாரே"

என்று திருவுளம் நொந்து கூறுகின்றார் திருமூலர். இந்நாட்டில் எத்தனை சமயங்கள் இருக்கின்றன தெரியுமா என்று ஏளனம் செய்வோர்க்கும், இதே உதாரணம் பொருந்தும். '**ஒரு நியமமே விண்ட சட்சமய வேதம்**' என்று, அருளும் அருணை முனிவர் அறிவிப்பை இங்கு எண்ணல் நலம்.

அபர வித்தை என்னும் நாத போதமான வேதங்களிலும், அந்த நாதத்தால் உந்தப் பெற்று உருவான அண்டங்களிலும், அதற்கு அப்பாலும், அங்கங்கு வாழும் ஆன்மாக்களிலும், அவைகளின் ஆக்கையிலும், ஆன்ம உணர்விலும், அதிநுண்ணிய பொருளாய் அமர்ந்த, உயரிய தெய்வ ஊளவை உணர்கின்ற போதே நம் உள்ளம் உருகுகிறதே!

உலகியல் இன்பம் பேய்த் தேர்; அது வெறும் கானல் நீர். ஊமன் கண்ட கனவுபோல் உளறி வழிவதன்றி, ஒரு பயனும் இல்லாமல் ஒழிகிறது வாழ்வு; அழுக்கு இன்பத்தையோ என்றும் அனுபவிப்பது? வறிது கழியவோ இவ்வுலகில் வந்தோம்?

ஊற்று நீர்போல் இன்பப் புத்தமுதம் ஊற்றெடுக்க, தன்னை உணர்கின்ற ஜீவனுக்குச் சிவபோக சுகத்தை உதவுகின்றான் சிவகுமரன் அங்கிலையனை, '**அமல ஆநந்த**' என்று, முனிவர் அழைக்கும் அருமையே அருமை!

'புணர்ப்பது ஒக்க எந்தை என்னை ஆண்டுபூண நோக்கினாய்
புணர்ப்பது அன்று இது என்றபோது நின்னொடு என்னொடு [என் இதாம்;
புணர்ப்பதாக, அன்றிதாக, அன்புநின் கழற்கணே
புணர்ப்பதாக அங்கணாள! புங்கமான போகமே'

என்ற திருவாசகம் இங்கு எண்ணத் தகும்.

பாச இயலிற் படர்கின்ற 'அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவன்' ஆதலின், 'சத்திகர' என்றார். ஞான சக்திதரன் என்பது அவன் திருநாமம் அல்லவா! ஞானமே, திருக்கரத்து வேல் உருவங் கொண்டு விளங்குகின்றது.

'செனித்த சீவர் உள் மனத்தின் மா ஒளி
மினுக்கும் வேலவ'

என்பது பாம்பன் அடிகளின் பயனான குறிப்பு.

கருகாவூர்த் தேவென்னைக் கைக்கொளுமோ? காண
அருகா உறுவேனோ? அந்நாளும் எந்நாளோ?

மேவு உணர் அ என்பது, மேவுணர என நின்றது. 'நம்பும் மேவும் நசையா கும்மே' என்பது தொல்காப்பியம். அகரம் பண்டறி சுட்டு.

விரும்பி யுணர்வார்க்கு, பிராணனாக நிற்கிறது பிரணவம். வாழ்விக்கும் குருவாகி வருகின்றான். அரிய பிரணவப் பொருளை அருள்கின்றான். ஊன்றிப் பொருளை உணரும் பொழுது, அப் பொருளே அவன் என்று அறிகிறது ஆன்மா.

'ஓங்காரத்துள் ஒளிக்குள்ளே முருகன் உருவம்' என்பது அலங்காரம்.

குரு மூர்த்தங்கட்குத் தலைமை தாங்கும் அப் பிரபுவை, அந் நிலையில், 'குருநாதா' என்று உணர்ந்து கூவுகிறது உணர்வு.

பரிதி ஒளியாய்ப் பளபளக்கின்றது கிண்கிணி. கிண்கிண் கிண்கிண் என்று கொஞ்சி ஒலிக்கிறது, திருவடிகளில் இருக்கும் அந்த அணி.

'குருகு நிலவு கோடை சூடி
முருகன் நடனம் ஆடுமே
முருகன் நடனம் ஆடும் மோதம்
கருதும் அடியர் காணுமாறு கடுகியே'

என்று குமரகுருதாசர் கூறுமாறு, ஆறுமுகப் பரமன் ஆநந்தம் கொண்டு ஆடுகின்றான். அந்நிலையில், கிண்கிணி மட்டுமா அசை கிறது; அவன் ஆட்டத்தில், சுழன்று சுழன்று அகில உலகமும் ஆடு கிறது. பரிதி மண்டலம், மதி மண்டலம், பிற கோள் மண்டலம், விண் மீன் மண்டலம், நிலவுருண்டை எல்லாம் அசைந்து சுழன்று ஆடுவதைப் புரிந்து உரைக்கின்றது பூகோள நூல். ஆடும் திரு வடிகள் அத்தனை மகிமை யுடையன. ஆதலின், 'கனபத' என்று உவந்து குதிக்கின்றது நம் உள்ளம்.

என்றுமுள்ள பிந்து தத்துவ அருமை மயில், போரில் இந்திர மயில், மாபெரும் சூர மயில் என்னும் மும்மயிலையும் உணர்த்த, 'கெருவிதா, துங்க, வெற்றி மயில்' என்று மூன்று அடை மகிழ்கிறது முனிவர் அகம்.

அளவிலா ஆற்றலை யுடையவனே என்பார், 'ஏறும் ஒரு திறலோனே' என்றார்.

அரிய இந்நிலை யறிந்த அடியவர் உள்ளங்கள், அவனே மெய்ப் பொருள் என்று உணர்ந்து நமக்கும் உணர்த்துகின்றன. ஒளி யும் ஈகையும், அறமும் மறமும் ஆகி அவதரித்தானை, 'சரவணபவா' என்று ஸ்ரீவள்ளி தேவயானையார் அன்று போற்றி அவனை மணந்

மாலை யழித்தென்னை மதிதெளிசெய் கின்றதிருப்
பாலைத் துறைபணியும் பாக்கியம தென்றேயோ

தனர். அந்த எழுத்துக்கள் ஆறையும், எண்ணுவார் பேறு இயம்ப இயலுமோ? ச - ஒளி, ர - ஈகை; வ - சாத்துவிகம்; ந - மறம். அவைகளி லிருந்து பவித்தவனே, சரவணபவா என்பதுதான் தகுவது.

வல் கரம் – வற்கரம்; கரம் - ஒளி. வலியும் ஒளியும் வாய்த்து வளர்ந்தமலை பழநி மலை. அதன்மேல் எழுந்தருளிய அண்ணல், பிரம ஞானிகளின் பெருந் தெய்வம் ஆதலின், 'சுப்ர மண்யா' என்று பெரிதும் விளிக்கப் பெறுகின்றான்.

என்றுமுள்ள தேவர்கள் ஏத்துகின்ற தெய்வத்தை, 'அமரர் பெருமாளே' என்று, ஓதும் போதே நம் உள்ளம் குழைகிறதே!

ஓயாமல் ஓதும் வேதம், ஓம் என்று மோனம் பெறும். 'மோனம் என்பது ஞான வரம்பு'. உரிய அம்மோன நுண்மையை சின்முத்திரையால் உணர்த்தும் கந்த சிவம்.

சிவஞானம் என்பது, ஞான சிவம் என முன்பின்னுக மாறி யது. சமயம் - கொள்கை. ஊன்றி அக் கொள்கையில் உறுதி யோடு நின்றால், சீவன் சிவச் சொரூபம் ஆகும். அந்நிலையை, அத்துவிதம் ஆன பர' என்பதில் அறிகிறோம் அல்லவா!

சுடர் ஒளி - சுடர்கின்ற ஒளி எனலுமாம். உருவமிலாத அவ் வொளிமய மூலமே 'நிஷ்கள' நிலை.

சிவம், சக்தி, விந்து, நாதம் எனும் அருவம் நான்கும், பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசன் எனும் உருவம் நான்கும், சதா சிவம் எனும் அருவுருவம் ஒன்றும் ஆன ஒன்பதும் கடந்த தனி முதலை, 'சொரூப' என்று விறிட்டு விளிப்பவர்களே வித்தகர்.

சின்னம் சிறிய இக வாழ்விற்கும், அக வாழ்விற்கும் மூல வாழ்வாய் முளைப்பானை, 'மூதல் ஒரு வாழ்வே' என்று ஊன்றி விளித்தால் உவகை விளையும்.

அறிந்தவரும் இத்தகையதென அறிவிக்க இயலாதது அற் புதம்; அதன் வழி சிறக்க விளைவது, சுபோதம் எனும் தீதற விளை யும் தெளிவு நிலை. தெளிவு பிறந்த பின் சுகம் தோன்றும்; இயற்கை ஒளி தோன்றும்; தூய நிரதிசய இன்பம் தோன்றும். இவை ஐந்தும், இறைவனது மலரடிகளி லிருந்து விளையும் மாண்புகள்.

நனவு நிலை, கனவு நிலை, உறக்கு நிலை என்னும் மூன்றும் கடந்த நிலை துரிய நிலை. முதன்மை பெற்ற அந்நிலையில் தோய்ந் திருப்பவர் முத்தர் எனப் பெறுவர்.

பல்லூறப் பேசிப் படபடத்த தல்லாமல்
நல்லூர் அமர்ந்தருளென் நாயகத்தை கண்டிலனே.

கண்டு களிக்கும்படி, எம்மான் இன்பத் திருவடிகள், அவர்தம் இதய கமலத்தில் என்றும் இனிது இருக்கின்றன என்னும் பகுதியை ஓதும் போதே, என்று நமக்கு இப்பேறு? என்று நெஞ்சம் பெரிதும் ஏங்குகின்றதே!

ஆறுமுக ஐய! உனது அருளால், இப் பேரின்பப் பெரு வாழ்வை, மேலோர் பெறுகின்றார். யானோ, தகவிலாத கருவில் தங்கினேன்; கருவில் பிராண வாயு கலந்தது; முக்குணங்கள் அதனால் வந்து முளைத்தன; அதன் வழி, வஞ்சமும் கபடமும் வளர்ந்தன. இங்ஙிலையில், பேதைமை கொண்டு உலகில் பிறந்தேன். முன்னை வினை, பல உருவில் வந்து மோதின. நாற்ற வாழ்வு, நான் வாழ்ந்த வாழ்வு. மெய் இது என்று உழன்று மெலிந்தேன். மயக்கம் பல சுரக்கும் மாயக் குகையே மாநுடம். இவைகளால், உண்டவற்றைக் கக்கி, அதையே மீட்டும் உண்ணும் நாய்போல், வெறுத்தவற்றையே மீட்டும் விரும்புகின்றேன். இப்படிப் பல பிறப்பில் அடிபட்ட கட்டை; மடமை நிறைந்த மட்டை; உய்ந்து கரையேற, அரிய உனது அருளை அருளாயோ? என்று, நமக்காக, முருகனிடம் வித்தக முனிவர் செய்யும் விண்ணப்பம் இத் திருப்புகழ் என்று விளம்புகின்றார் மேலோர்.

வாழ்க திருப்புகழ்!

அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A.B.T.)

கந்தர் அலங்காரம் :

இந்நூல் கந்த பிரானரது திருவுருவின் சிறப்பையும், ஆடும் மயில், வேல், அணி சேவல் இவற்றின் அருமை பெருமைகளையும் அழகுற **அலங்காரமாக** விளக்குவது. செந்தமிழ் நூல் விரித்த செவ்வேளுக்குப் பன்னிரு வாகுவில் **அலங்கு** (அசைந்தாடும்) **ஆரம்** (பாமாலை) ஆகும்.

அலங்கார அமைப்பு:

இதில், குழந்தை வேலனும் குகவேளைத் திருவடி முதல் திருமுடி வரையில் தெரியக் காட்டிக் குரு வடிவாய்

**சாவூறும் வாழ்க்கைச் சதிகண்ட தல்லாமல்
ஆவூர் அமலாளன் றரற்ற அறிந்திலனே**

அவன் காட்சி தர, உள்ளங் குளிர்விக்கும் செய்தி பாராட்டற்பாலது.

திருவடி :

என்று மிளைய பெருமான் முருகன். எடுப்பார்க்குக் குழந்தையாய், ஏந்துவார் கைப்பிள்ளையாய் இன்னருள் சுரப்பவன் எம் இறைவன். இதனாலன்றோ

"தையல் உமை கைப்பிள்ளை சங்கு அரிக்கு மாப்பிள்ளை மெய்ப்பிள்ளை பொய்ப் புவியின்மேல்"

என்றார் பிறரும். உருவத்திற்கேற்ப உறுப்புக்களும் அமையும் அல்லவா? அதே போல முருகவேள் குழந்தையாக இருப்பதால் அவன் திருவடியும் சின்னம் சிறுபாதமாகவே இருப்பது இயல்பு. இதனைத் திருப்புகழில் "மூதிராத நற் பதங்கள்" என்றார். இத்திருவடியின் சிறப்பை விளக்கச் சீர்பாத வகுப்பே பாடியுள்ளார் நம் அருணகிரி. மேலும் இவற்றின் பெருமையைக் கூறும்போது, மாவலியிடம் மூவடி நிலங் கேட்டு மூவுலகும் தாவி அளந்த மாலோன் மருகன் தன் மணநாறு சீறடி, தாவடியோட்டும் மயிலிலும், தேவர் தலையிலும், அருணை அண்ணல் அருளிய திருப்புகழ் நூலின் அடியேட்டிலும் (முதல் ஏட்டிலும்) பட்டது. மூவுலகை அளக்க நெடுமால் சேவடியை நீட்டி அளந்தார். மருகனை முருகனோ சிற்றடியை நீட்டாமலேயே மூவிடத்திலும் வைத்துவிட்டார். உலகளந்த மாமாயன் மலரடி மூதண்டம், கூடம், முகடு என்ற மூவிடங்களை முட்டி மிமிர்ந்தது. முருகபிரான் சேவடியோ மயில், தேவர்கள் சென்னிகள், திருப்புகழ் அடியேடு என்ற மூவிடங்களிலும் முறையே பட்டது என்பன போன்ற பல கருத்துக்களை அலங்காரமாக அறியவைக்கிறது "தாவடியோட்டும்" என்ற திருப்பாட்டு. கானமயில் வீரன் கால், பட்டாலே பிரமன் துயருறக் கீறும் கையெழுத்தென்னும் தலையெழுத்து அழிந்துவிடுமாம்.

"கால் பட்டழிந்தது... தலைமேல் அயன் கையெழுத்தே"

முத்தி யுதவும் முதல்ஞானச் சித்தியுள
சத்திமுற்றச் சார்பு சார்வதுவும் என்றேயோ

கந்தவேள் காலுக்குமேலே

பெருமான் காலைக் கண்டதும் குழந்தைகளணியும் **தண்டையும் சிலம்பும்** காட்சியாகின்றன. தண்டையணிந்த தெய்வக் கஞ்சத் திருமலர்ச் சரணங்களில் சிவஞானத் தேன் ததும்பும். அத்தேனைத் தொண்டர்களான மெய்யடியரே அறிந்து அடுத்து எடுத்துண்டு களிப்பர். "தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் **சுத்த ஞானம் என்னும் தண்டையம் புண்டரீகம்**" என்பதை நோக்குக.

சிலம்பு :

இனிய நாதச் சிலம்பு இளம்பூரணன் அடியிடும்போதெல்லாம் அவன் வருகையை முன்கூட்டி அறிவிக்க அமைந்துளதாம். அப்பெருமான் காலில் **வீரக்கழலும்** கட்டியுள்ளான். காரணம்,

"தேங்கிய அண்டத்து **இமையோர் சிறைவிடச்** சிற்றடிக்கே **பூங்கழல் கட்டும்** பெருமான்" என்று விளக்கப் படுகிறது.

வேல் :

சிலம்புக்கு மேலே மலை தொளைத்த வேலொன்று புறப்பட்டுப் போய் கடம்பணிந்த தடம்புயத்தில் சார்ந்து நிற்கிறது. அதன் சிறப்புத் "**தோரணியிட்டு**" என்ற பாடலில் கூறப்பட்டுள்ளது.

ஆறிருதடந்தோள்:

பக்தர்க்கிரங்கி அருள் வழங்கும் பாரப் புயாசலங்கள் பன்னிரண்டும் தண்மலர்க் கடப்ப மாலை தாங்கியே நிற்கின்றன. பெருமான் இதனால் '**கந்தக் கடம்பன்**' என்ற திருநாமம் ஏற்கிறான். காளைக் குமரேசன் கடம்பு அணிந்த காரணத்தை,

"கடிமா மலர்க்குளின்ப முளவேரி கக்கு நண்பு தருமா
கடம்பமைந்த—தொடைமாலை
கனமேருவைத் தடிந்தபன் னிருமா புயத்தணிந்த
கருணைகரப்ரசண்ட—கதிர்வேலா"

என்ற திருப்புகழால் அறிக.

வெட்டிப்பேச் சல்லால் வீறுதரும் பேறுதரும்
பட்டிச் சரம்பணியும் பாக்கியம தென்றேயோ

ஆறுமுகம்:

திருத்தோள்களுக்கு மேலே கண்டால் கருணை மலர்ந்த கண்களுடன் எம்பெருமானது ஆறு திருமுகம் தரிசனம் ஆகும். அதனால் எமபயம் நீங்குமென்பது.

"......**திருமுகம் ஆறும் கண்ட**

தமராகிவைகும் தனியான ஞான **தபோதனர்க்கு** இங்கு **எமராஜன்விட்ட கடையேடு வந்தினி என் செய்யுமே**"

என்பதால் புலனாகிறது.

இவ்வளவு சிறப்புடன் அருணகிரியார் குக வேளைக் குரு வடிவில் கண்டு உள்ளங்குளிர்ந்து கூத்தாடுமாறு தரிசித்தனர்.

"**திருவடியும் தண்டையும் சிலம்பும்** சிலம்பூடுருவப்
பொருவடி **வேலும் கடம்பும்** தடம் **புயம் ஆறிரண்டும்**
மருவடிவான **வதனங்களாறும்** மலர்க் **கண்களும்**
குருவடிவாய் வந்து என் உள்ளம் குளிரக் குதி
கொண்டவே"

என்ற அருமைக் கவி ஒன்றே கந்தரலங்கார முழுவதும் கற்க வழி சொல்லும் போலும்

இவ்வாறே சண்முகனைச் சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு தாழ்வில்லை. ஆதலால் நம் மனக்கண் முன்னர், மயிலோன் வடிவினை மாண்புறக் காட்டுதற்கு மேலே வந்த பாடல் ஒன்றே போதும். முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழ வைக்கும் முத்துக் குமரன் அடியார்க்கு நல்ல பெருமாளாய், அமரும் திறமெல்லாம் திறம்பட விரித்துரைக்குமிந்நூல்,நமது **பாராயண நூலாதல் வேண்டும்** என்று அருணகிரி அண்ணல் திருவுளம் பற்றியே இப் பிரபந்தத்தை, **கட்டளையிடும் கட்டளைக் கலித்துறையில்** ஆக்கினராதல் வேண்டும். கலியுகத்தின் கலிநெறி கடக்க வைக்கவே **கந்தர் அநுபூதியைக் கலிவிருத்தத்தால்** அமைத்ததும் கருதுக.

மேற்கூறிய சிறப்புக்கள் பலவுடன், ஆசிரியர் ஆண்டவன் பால் பெற்ற அருளநுபவமும், "தாம் பெற்ற பேறு

கூவிப் பணித்தே கூற்றெனைக்கொண் டேகாமுன்
வாவு பழையாறை வந்தேற்கு நாளுறுமோ

பெறுக இவ்வையகம்'' என்னும் தனிப் பெருங் கருணையாக உலகிற்கு உபதேசமாகவும், நெஞ்சிற்கு அமைவுரையாகவும் கூறிய அறிவுரைகளும் இந்நூலில் நிறைந்துள்ளன. இந்நூலிலமைந்த காப்புச் செய்யுளில் 'அடல் அருணைத் திருக் கோபுரத்தே' என்பதால், அருணையில் இந்நூலில் பல திருப் பாடல்கள் பாடப்பட்டனவாகலாம்.

இவ்வாறு 'ஆடக விசித்திர கன கோபுரத்துடன் விளங்கும் அணி அண்ணமலைதான், அருணகிரிநாத சுவாமிகள் கண்ட அற்புத அருணையம் பதியாகும் எனக் கூறி நிறுத்தி, இனி, வாயுதலம் என்ற திருக்காளத்திக்குச் செல்வோம்.

இரவு பகற்—பலகாலும்
இயலிசைமுத்—தமிழ்கூறித்
திறமதனைத்—தெளிவாகத்
திருவருளைத்—தருவாயே
பரகருணைப்—பெருவாழ்வே
பரசிவதத்—துவஞான
அரனருள்சற்—புதல்வோனே
அருணகிரிப்—பெருமாளே

பெரிய புராணச் சித்திர விளக்கம்.

திருஞான சம்பந்தர்

(கி. வா. ஜகந்நாதன்)

பிறவிப் பெருங்கடலில் ஆழாமல் மிதந்து இறைவன் அடியாகிய தெப்பத்தில் ஏறிக்கொள்ளும் வழியை உலகத்துக்குக் காட்டத் திருஞானசம்பந்தர் உதித்த திருத்தலம் சீகாழி. அதற்குத் தோணிபுரம் என்பது ஒரு பெயர். பிரளய காலத்தில் அவ்வூர் தோணியாக மிதக்க இறைவனும் இறைவியும் விளங்குவதால் அதற்கு அப்பெயர் வந்தது. சோழ வளநாட்டைச் சார்ந்தமையால் நிலவளமும் நீர்வளமும் செழித்த ஊர் அது.

ஆன மயக்கில் அகப்படா முன்னெனையே
வான வடதளியான் வாளன் றருளானே

வேத வேள்வியை முறையாகச் செய்து உலகு இனிது வாழ வழிவகுக்கும் அந்தணாளர் பலர் வாழ்ந்த திருத்தலம் அது. அவ்வாறு வாழ்ந்தவர்களுள் சிவபாத ஹிருதயர் என்பவர் ஒருவர். பெயருக்கு ஏற்றபடியே சிவபெருமான் திருவடிகளை என்றும் மறவாத உள்ளம் படைத்தவர். அவருடைய மனைவியார் கற்பும் பொற்பும் உடைய பகவதியார். மனையறத்தில் சிறந்து நின்ற அவ்விருவருக்கும் சிவ சமயம் எங்கும் பரவி உயிர்கள் இன்பம் பெறவேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. புறச் சமயத்தினர் தம்முடைய வாக்கு வன்மையாலும், செல்வம், பதவி முதலியவற்றாலும் சைவர்களைத் தம் மதத்துக்கு மாற்றி வந்த காலம் அது. அரசியலில் மறைவாக நின்று ஆட்டி வைத்தனர். அதனால் சைவ ஒழுக்கமும் சிவநெறியும் வரவர மாறி விடுமோ என்ற அச்சம் இந்த இரண்டு பேருக்கும் இருந்து வந்தது. பரசமயத்தினருடைய பொல்லாங்குகளைப் போக்கும் அருளாற்றல் படைத்த பிள்ளை ஒருவனைப் பெற வேண்டுமென்று அவர்கள் தவம் புரிந்தார்கள்.

இறைவனுடைய திருவருளால் சைவமும் வைதிகமும் தழைக்கவும், தமிழ் மொழிக்குப் பெருமை உண்டாக்கவும் பகவதியார் திருவயிற்றில் ஓர் ஆண் குழந்தை திருவவதாரம் செய்தது. அப்பொழுது எங்கும் நன்னிமித்தங்கள் உண்டாயின. தம்முடைய குறை நீங்கும் என்று பெற்றோரும் மற்றோரும் உவகை கொண்டனர்.

குழந்தை சிவபெருமான் திருவருள்போல் வளர்ந்து வந்தது. குழந்தைப் பெருமானுக்கு மூன்று பிராயம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஒருநாள் சிவபாத ஹிருதயர் வழக்கம்போல் வேத விதிப்படி சடங்குகளை முடிப்பதற்குமுன் நீராடும் பொருட்டுத் திருக்கோயிலிலுள்ள பிரமதீர்த்தத்தை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது குழந்தைப் பெருமானும் உடன் வருவதாகச் சொல்லி அழுதார். அழுது தொடர்ந்த குழந்தையைக் கோபிப்பவரைப் போலத் தந்தையார் தடுக்க, அவர் காலைத் தரையிலே உதைத்துப் பிடிவாதம்

மலஞ்சுழித்த பாழ்வாழ்வில் மாழ்கி மயங்குமுனே
வலஞ்சுழியான்புன்னகையால்வாழ்வித்தல் செய்யானோ

செய்தார். அது கண்ட தந்தையார், "சரி, வா" என்று அழைத்துச் சென்றார்.

பிரம தீர்த்தத்தின் கரையில் குழந்தைப் பிரானை இருக்கச் செய்து சிவபாத ஹிருதயர் நீராடப் புகுந்தார். நியமமெல்லாம் செய்து அகமருஷண ஜபஞ் செய்வார் நீரில் மூழ்கியபடியே இருந்தபோது, குழந்தைப் பிரான் அவரைக் காணமல் ஆலயத்து மலைமேல் எழுந்தருளியிருக்கும் தோணியப்பர் சந்நிதியை நோக்கி, "அம்மா, அப்பா!" என்று கூவி அழத் தொடங்கினார். முன்னைத் தொடர்பினால் வேறு எங்கும் பார்த்து அழாமல், திருத்தோணியப்பர் திருக்கோயில் விமானத்தைப் பார்த்து அழுதார். சீகாழியில் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருப்பவர் பிரமபுரீசர். அந்தக் கோயிலில் கட்டுமலை ஒன்று உண்டு. அதில் தோணியப்பர் அம்பிகையோடு எழுந்தருளியிருக்கிறார். அது தனிச் சந்நிதி. அதை நோக்கிக் குழந்தைப் பெருமான் அழலானார்.

அப்போது இறைவன் அவருக்கு அருள் புரியும் பொருட்டு உமாதேவியாருடன் இடப வாகனத்தின் மேல் எழுந்தருளி வந்து, குழந்தைப்பிரானுக்குப் பால் கறந்து ஊட்டும்படி அம்பிகையிடம் திருவாய் மலர்ந்தருளினார். அப்படியே உமாதேவியார் பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து சிவ ஞானத்தையும் குழைத்து அந்தப் பிள்ளைப் பெருமானுக்கு அருத்தினார். சிவ ஞான அமுது குழைத்த பாலை உண்ட அப்போதே அப்பிள்ளைப்பிரான் ஞானசம்பந்தர் ஆயினர். சிவஞானம் கனிந்தது. கலை ஞானம் சிறந்து விளங்கியது. எல்லோருக்கும் தந்தை தாயாகிய சிவபிரானும், அம்மையும் வந்து பாலூட்டியமையால் அவர் தெய்வப் பிள்ளையாயினர். ஆளுடைய பிள்ளையார் என்று யாவரும் போற்றிப் பாராட்டும் சிறப்புப் பெற்றார்.

சிவபாதஹிருதயர் சிறிது நேரத்தில் நியமங்களை முடித்துக்கொண்டு கரைக்கு வந்து தம் மகனாரைப் பார்த்தார். அவருடைய வாயில் பால் வழிந்திருப்பதைக் கண்ட அவர் சினந்து, "உனக்கு இங்கே பாலைக் கொடுத்தவர் யார்?"

ஆணவத்தை நீக்கி யருள்கின்ற தாம்கும்ப
கோணன் திருவருளிற் கூடும் குறிப்புறுமோ

என்று ஒரு சிறிய கோலை எடுத்து அடிப்பதாகப் பயமுறுத்திக் கேட்டார்.

ஆளுடைய பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் வழியத் தம்முடைய கையைத் தூக்கி ஒரு விரலால் தோணியப்பரைச் சுட்டிக் காட்டி, "தோடுடைய செவியன்" என்ற திருப்பாட்டைப் பாடினார்.

தமிழ் வேதத்தின் தொடக்கமாகிய அப்பாட்டில், வடமொழி வேதத்தின் தொடக்கமாகிய பிரணவ ஒலியைத் தகரத்துடன் இணைத்து, "தோ" என்று தொடங்கினார். இறைவன் வாம பாகத்தில் உள்ள திருச்செவியில் தோடு அணிந்திருக்கிறான். அது அம்மை எழுந்தருளிய பங்கு. தமக்குப் பால் சுரந்த பெருமாட்டியை நினைந்து தோட்டைப் பாடினார். தாம் தேவாரத் திருத்தொண்டு செய்யப் புகுவதனால் அப்பாடல்கள் சென்று சேரும் வாயிலாகிய திருச்செவியை முதலில் பாராட்டினார்.

தோடு டையசெவி யன்விடை ஏறி ஓர்
தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசிஎன்
உள்ளம் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாள்பணிந்
தேத்த அருள்செய்த
பீடு டையபிர மாபுரம் மேவிய
பெம்மான் இவன்அன்றே.

என்பது பாட்டு. அப்பால் அதைத் தொடர்ந்து ஒரு திருப்பதிகத்தையே பாடி நிறைவேற்றினார்.

அப்போது தேவர்களெல்லாம் உவந்து ஆரவாரம் செய்தார்கள். தந்தையார் விம்மிதம் அடைந்து நின்றார்.

திருவண்ணாமலையில்
திரு அருணகிரிநாதர் திருவிழா

சுதந்திர நாளான ஆகஸ்ட் 15-ஆம் நாள் காலை, ஆறு படைவீட்டு நினைவில் ஆறு பஸ்களில் திருப்புகழ் வேத பாராயணத்துடன் பல அடியார்கள் சென்னையிலிருந்து

புறப்படுகின்றனர். இடைவழியில் உள்ள திருமயிலம் முருகனைச் சேவித்துத் திருவண்ணாமலையைச் சேர்வர். 2 மணி முதல் கோபுரத்து இளையனார் சந்நிதிமுன் திருப்புகழ்ப் பாராயணம், அதன்பின் பல பெரியோர்களின் சொற்பொழிவு, இரவு அருணகிரிநாதர் திருவுருவ வீதி விழா இனிது நடைபெறும். வெளியூரிலுள்ள பல பாராயண சபைகள் இத்திருப்பணியில் பங்கு கொள்கின்றன. விளக்கம் அடுத்த இதழில் வெளியிடப் பெறும்.

A THREE-WORLD WONDER

The Sastras and the Upanishads talk frequently of three worlds. These worlds are called lokhas. The world of Ananda - heaven - is the highest in which there is said to be eternal joy. The material world of man is in between. It is a world of admixture of pain and pleasure. There is the third world of suffering—pathala lokha. These three worlds possess differing atmospheric attributes. The atmosphere is what the mind of man makes. The experiences of the three worlds are borne in into man in life. Generally man is a mere creature of the atmosphere in which he is born or 'bread up. But there are men who make their own atmosphere in life. They are the men of light and leading. They create the world they live in. God penetrates these atmospheres of the three worlds. The great saints of our land have realised Him as existing in all the worlds. The Maha Sadhus, having discovered Him do not rest content. Out of the abundance of love and mercy for the jivas of the worlds, they go forth, to redeem other lives from the mire of sorrow and frustration. Un-

faltering faith and universal love alone can do this.

Imbued with an unfaltering conviction and a stern belief in the omnipresence of God, His unfailing mercy and His immanence and transcendence, the great teachers of the world have gone out to preach to the world the way to find Him, and to expound His divinenature and to sing of His unity. Hence the Upanishads declare that man who finds Him to be a world's wonder. Even so the man who expounds Him. Even so the man who sings of His unity in unremitting strains of divine music. It is nothing surprising that every great Bhakta of realisation is regarded as a hero and a three-world wonder. Here is what the Katha Upaisha says.

Who finds Him is a world's wonder; who expounds Him is a world's wonder: who inherits Him from his master is a world's wonder. The message of Manikka Vachagar is well worth recalling.

> சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
> சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
> செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
> பல்லோரும் ஏத்தப் பணிந்து.

They are the truly wealthy who sing in words of Him who lies beyond words, and who realising the essence of the songs sung by them, thereafter expound the same. They are always at the feet of the Lord, in eternal submission to Him. The world's praise is always with them.

—*Thiruppugal Mani*

நதியோடு தும்பை முடிமீ தணிந்து
நலமான வெள்ளை விடைமேல்
பதியா யிருந்து உமைபாதி கொண்ட
பரனேஉன் நாமம் மறவேன்
விதிநாதன் ஏவ எமதூதர் வந்து
வெருவாதை செய்து விடுமுன்
மதியே புனைந்த அருணாசலேச!
வரவேணும் என்றன் எதிரே!

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1956 ஆவணி—அமிர்தவசனி)

260.

Coffee
Ours for Quality
RAW, ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்
குகஸ்ரீ. பு. பா. ரசபதி அவர்களின் அருமையான
விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
,, 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள்	(அச்சில்)		
கணபதி பக்தர்கள்	,,		
முருகனடியார்	,,		

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18